நம் வழி வேளாண்மை

பருவம் 33 ஜூலை – செப்டம்பர் 2024 இதழ் 2

தேசிய அளவில் நடைபெற்ற மேய்ச்சல் நில மேலாண்மை மூலம் ஊரக வளர்ச்சி கருத்தரங்கம்

நாள் : 29 –31, ஜூலை 2024, இடம் : ஸ்ரீநகர், ஜம்முகாஷ்மீர்

இயற்கைவழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

நம் வழி வேளாண்மை

பருவம் 33 ஜூலை – செப்டம்பர் 2024 இதழ் 2

ஆசிரியர்
பெ. விவேகானந்தன்

நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

நம்வழி வேளாண்மை குழுமம்

பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

நம் வழி வேளாண்மை
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலைபேசி : 0452– 2380082
இமெயில் vivekseva@gmail.com

ஆங்கில இதழ் முகவரி
Prof. Anil Gupta,
Honey Bee,
SRISTI, AES Boys Hostel Campus,
Near Gujarat University Library & SBI Bank,
Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,
email: honeybee@sristi.org

ஊர்க்காலி மாடு

“பாப்பாத்தி அம்மா மாடு வந்திருச்சு. கட்டுனா கட்டு f £l h£o¥ ngh” – என்பது கிராமத்தில் கூறப்படும் ஒரு பழமொழி.

முன்பு சுமார் 60–70 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டில் பல கிராமங்களில் ஊர்க்காலி மாடுமுறை இருந்து வந்தது. இதன்படி கிராமத்தில் மாடு வளர்ப்போர் மாடுகளை பொதுவாக பராமரிப்பதற்கு அதாவது மேய்ப்பதற்கு ஏழைக்குடும்பத்தை சார்ந்தவரை நியமிப்பர். இது பாரம்பரியமாக இந்தக் குடும்பத்திலிருந்து பல தலைமுறைகள் மேய்ச்சல் தொழிலைச் செய்து வருவர். மேய்க்கும் முறை காலை சுமார் 9 மணிக்கு ஊர்க்காரர்களின் மாடுகளை ஓட்டிச்சென்று பொது இடங்களில் அல்லது மலையை ஒட்டிய பகுதிகளில் மேய்த்து விட்டு மாலை வீடு திரும்புவர். மாலைப்பொழுதில் மாடுகளை ஊரில் சேர்த்து விடுவார். சில மாடுகள் நேராக அவரவர் வீட்டிற்குச் சென்றுவிடும். சில மாடுகள் அடம்பிடித்து வெளியே சென்று வெள்ளாமையில் மேய்ந்து விடும். இச்சமயத்தில் மேற்கூறப்படும் பழமொழியை மாடு மேய்ப்பவர் ஒவ்வொரு தெருவாகச் சென்று சொல்லி விடுவார். அதாவது “உங்கள் மாடு வந்துவிட்டது. அதை தொழுவத்தில் கட்டிவிடுங்கள்”. அப்படிக் கட்டிவிடாமல் இருந்துவிட்டால் ஏற்படும் பின் விளைவுக்கு தான் பொறுப்பல்ல என்பது அர்த்தம்.

மாட்டின் சொந்தக்காரர் மாடு மேய்ப்பவருக்கு தினமும் கஞ்சி அல்லது சோறு வழங்குவர். இது தவிர வெள்ளாமை அறுவடைக் காலத்தில் மாடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்றார்போல் தானியம் அல்லது பணம் கொடுப்பார்கள். இது சம்பந்தமாக ஒரு கிராமத்தில் சொல்லப்பட்ட கதை.

ஒரு சிறுவன் தினமும் ஊர்மாடுகளை மேய்த்து வந்தான். மாடுகளை ஓட்டிச்செல்லும் சமயம் சில வீடுகளில் கிடைக்கும் பழையசோறு அல்லது கஞ்சியை தூக்குவாளியில் எடுத்துச்செல்வான். மதிய வேளையில் மாடு மேய்த்துக்கொண்டிருக்கும் சமயம் ஒரு மரத்தடியில் அமர்ந்து உணவு அருந்துவான். அச்சமயம் இறைவனை வேண்டி “இந்தா நீயும் ஒரு கை எடுத்துக்கொள்” என்று கூறிவிட்டு உண்பான். ஒரு நாள் உடல்நிலை சரியில்லாததால் சற்றுத் தாமதமாக வந்து வீட்டுக்காரர்களிடம் கஞ்சி கேட்டான். வீட்டுக்காரர்கள் கொஞ்ச நேரம் முன்புதான் கஞ்சி கொடுத்தேன். அதற்குள் மீண்டும் கஞ்சியா? என அதட்டினர். சற்றுமுன் கஞ்சியை பெற்றுக்கொண்டு மாடுகளை ஓட்டிச்சென்றது யார் என்று மாடு மேயும் பக்கம் சென்று பார்த்தனர். மேய்ப்பவர் இல்லை. அங்கே மாடுகள் மட்டுமே இருந்தன.

கிடைத்தது எதுவானாலும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்து கடமையைச் செய்பவரை இறைவன் காப்பாற்றுவான்.

நன்றி : மேய்ச்சலியம் ஆய்வுக் கட்டுரைத் தொகுதி –1

காலநிலை மாற்றமும் இயற்கை வேளாண்மையும்

எரிசக்தி, தொழிற்சாலைகளில் உர உற்பத்தி மற்றும் போக்குவரத்திற்காகப் புதைபடிவ எரிபொருட்களான நிலக்கரி, பெட்ரோல், மற்றும் டீசல் போன்றவற்றை எரிப்பதால் உருவாகும் பசுமை இல்ல வாயுக்கள் புவி வெப்பமடைதலுக்கு முக்கியப் பங்கு வகிக்கிறது. கடந்த 100 ஆண்டுகளில் புவியின் சராசரி வெப்பநிலை ஒரு டிகிரிக்கும் அதிகமாக உயர்ந்து உள்ளது. ஒரு டிகிரிதானே அதனால் என்ன ஆகிவிடும் என நினைத்துவிடக்கூடாது. இந்த வெப்பநிலை அதிகரிப்பு துருவப் பனிக்கட்டிகள் மற்றும் பனிப்பாறைகள் வேகமான விகிதத்தில் உருகி, கடல் மட்டம் உயரப் பங்களிக்கின்றன. இது வெள்ளம், கடல் அரிப்புகள், கடல் உள்வாங்குதல் ஆகிய அச்சுறுத்தல்களுக்குக் காரணமாக அமைகிறது. காலநிலை மாற்றத்தால் வாழ்வாதாரத்தை இழந்த எண்ணற்ற உயிரினங்கள் அழிவுக்குத் தள்ளப்பட்டுள்ளன. பருவ காலங்கள் மாறி மழை பெய்வதும், அதீதமாக மழை பெய்து வெள்ளத்தில் பாதிக்கப்படுவதும், சூறாவளி, வெப்ப அலைகள், வறட்சி போன்றவற்றால் ஏற்படும் சேதங்கள் ஆகிய பலவும் காலநிலை மாற்றத்தின் பங்களிப்பாகும். கார்ப்ன்டைஆக்சைடு போன்ற வாயுக்களின் அளவு அதிகமாகும் பொழுதும், தொழிற்சாலைகளின் கழிவு கடலில் கலப்பதாலும் கடல்களில் அமிலத்தன்மையை ஏற்படுத்துகின்றன. இது கடல்வாழ் உயிரினங்கள் பவளப்பாறைகள் போன்றன இதனால் அழிந்து போகும் ஆபத்தும் அதிகமாக இருக்கிறது.

காற்றிலுள்ள கரியமல வாயுவை கிரகித்து உயிரிய கரிமமாக மரங்களும், தாவரங்களும் சேகரித்து வைக்கின்றன. மரங்களுள்ள வனப்பகுதியில் உயிரிய கரிமம் தரைக்கு மேலாகவும், புல்வெளிப்பகுதிகளில் மண்ணுக்கு கீழேயும் இக்கரிமம் சேகரிக்கப்படுகிறது. இந்த கரிமம் பூமியில் இருப்பதால் மண்ணின் நீர்ப்பிடிக்கும் தன்மை, ஊடுருவும் தன்மை, வடிகால்திறன், நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை சிறப்பாக உள்ளது. இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதால் கனிம அளவு குறைகிறது. உதாரணமாக கடந்த 30 ஆண்டுகளாக கரும்புக்கு இயற்கை விவசாயம் அதுவும் மறுதாம்பு பயிராக தொடர்ந்து பயிர் செய்யப்படும் மண்ணில் கரிம அளவு உயர்ந்துள்ளது. இது சாதாரணமாகக் காணப்படும் அளவை விட 0.75 சதவீதம் கூடுதலாக உள்ளது. இதனால் இராசாயன உரமின்றியே இயற்கை முறையில் பயிர் செய்யப்படும் கரும்பின் விளைச்சல் கூடியுள்ளது. கோ–86032 கரும்பு இரகத்தில் ஓர் ஏக்கரில் 80–90 டன்கள் விளைச்சலை திரு. அந்தோணிசாமி எடுத்துள்ளார். இதனை கரும்பு இனப்பெருக்க ஆராய்ச்சி மையம், கோயம்புத்தூர் விஞ்ஞானிகளும் பார்வையிட்டு பாராட்டியுள்ளனர். எனவே இயற்கைமுறை விவசாயம், இயற்கை முறை கால்நடை வளர்ப்பு, மேய்ச்சல் நிலங்களை அழித்து மரங்கள் நடுவதை தவிர்ப்பது சுற்றுச்சூழலுக்கும், புவி வெப்பமயமாதலை தவிர்ப்பதற்கும் உதவும். பிரதமந்திரியின் லட்சியமான ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு மாதிரி இயற்கை விவசாய கிராமம் உருவாக வழிவகுக்கும். இதை கருத்தில் கொண்டே ஐ.நாசபை 2026வது ஆண்டை உலக மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்களின் ஆண்டாக அறிவித்துள்ளது. இதை மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி இயற்கை வேளாண்மை, மேய்ச்சலுடன் கூடிய கால்நடை வளர்ப்பு போன்ற பாரம்பரியத்தை கொண்டாடுவோம்.

உலக மேய்ச்சலாண்டு பாடல்

மா..டு வரும் மந்தையிலே
மணிச்சத்தம் கேட்கும் ஊரினிலே
தேடும் பொருள் கிடையினிலே
தீதும் இல்லை தரணியிலே (மாடு)

ஊரில் மாடு மேய்ப்பார்களாம்
உறவு சொல்ல ஊரார்களாம்
ஊரைவிட்டு சென்றுவிட்டால்
உறங்குமிடமும் காடுகளாம் (மாடு)

மெல்லிய புல்லும் மகிழ்ந்திடுமாம்
மேயும் மாடு வந்து விட்டால்
தெள்ளிய வானம் தூய்மையாகும்
தள்ளிய மாசும் புல்லினாலே (மாடு)

உதவாநிலத்தில் புற்களுமே
உதவும் மேய்ச்சல் ஜீவனமாம்
எதுவுமில்லா பூமியென்று
ஏளன எண்ணம் ஏற்கவேண்டாம் (மாடு)

ஐ.நா.சபை தீர்மானமாம்
ஈராயிரமாண்டு இருபத்தாறாம்
அரிய தருணம் மேய்ச்சல் ஆண்டாம்
அல்லலில்லா குலத்தொழிலாம். (மாடு)

மேய்ச்சல் காடு பூமியிலே
மேளிச் செல்வம் மேதினிலே
வாய்க்கும் தொழில் கிடையினிலே
வாழும் நாடும்வரு மானத்திலே (மாடு)

கிராவல் சுண்ணாம்புக்கல் வீடு





சுண்ணாம்பு ஒரு பாகம் கிராவல் குருனை 10 பாகம் தண்ணீர் கலந்து 20 செ.மீ அளவான இரும்பு பிரத்தியேக அளவில் மிக மிக அழுத்தம் கொடுத்து கற்கள் தயார் செய்யப்படுகிறது. கற்களை இணைக்க சிமெண்ட் சுண்ணாம்பு கலவை சாந்து பயன்படுத்தி கட்டலாம். கட்டிடத்தில் எல்லா பாகத்திற்கும் கல் பயன்படும். உள்வெளிக் கலவை பூச்சு, வண்ணப்பூச்சு இல்லை. வளைவுக்கூரை 8 பாகமாக உள்ள தகரதற்காலிக தளம் தாங்கும். பணிமுடிவில் நீக்கலாம். உரிய உபகரணங்களுடன் செய்ய முடியும். செங்கற்கள் அனைத்து பகுதிக்குமான வீடு கடைக்கால், சுவர், தரை, கூரை, செங்கற்களே. உள்சுவர், சீலிங், சாந்து பூச்சு, வண்ணப்பூச்சு தவிர வெளிப்புறம் நீர்புகா வண்ணபூச்சு செய்க. தரை ரெட் ஆக்சைடு சிமெண்ட்டினை சாந்துடன் பூச்சு, கூரைசமதள செங்கல் சிமெண்ட் கான்கிரீட் 8 மிமீ கம்பி 2 முன் தயாரிப்பு பலகையினை ஒரு வடிவ முன் தயாரிப்பு 2 பீம் தூலம் 3 சுவர்கள் தாங்குகிறது. கூரை சமதளத்திற்கு மேற்புறம் தார் பெயிண்ட் பூசி, சிமெண்ட் பூச்சு செய்து பிறகு நீர் புகா சூரிய ஒளி தாக்காத பெயிண்ட் பூசவும்.

செங்கல் ஆர்ச் வடிவ வீடு

3 எண்ணிக்கை ஆழ்துளை காங்கீரீட் கடைக்கால் செங்கல்பில்லர்களால் தாங்குகிறது. வீட்டின் இரு புறமும் ஆர்ச் வடிவ ஜன்னல் நடு சுவர் 2 வழி அமைப்பு, ஆர்ச் வடிவமானது ஆர்ச்வடிவ பணி செய்பவர்களை பயன்படுத்தவும்.

மேற்கூறிய வடிவமைப்பு வீடுகள் 1975ல் நடைபெற்ற அகில உலக மலிவு விலை வீடுகள் கருத்தரங்கில் முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகள் பெற்றவை. காலத்தால் என்றும் பயனளிக்க கூடிய கட்டிட வடிவங்கள் என திரு. தியாகராஜன் கூறுகிறார்.

வீடு வடிவமைப்பாளர்: திரு. தியாகராஜன், நிலக்கோட்டை. செல் : 9942102014

கொரங்காட்டில் வேலியின் உத்திகள்

திருப்பூர், கரூர் மாவட்டங்களில் காணப்படும் கொரங்காடு பகுதியில் கொழுக்கட்டைப்புல் வெளியில் வேலாமரங்கள் உண்டு.

இந்த புல்வெளியைச் சுற்றி ஒவ்வொருவர் காட்டு எல்லைப்பகுதியில் வேலி போடுவர். முன்பு இந்த வேலி போட கிலுவைமுள் என்ற மரக்குச்சிகளை நடுவர். பின்னர் இவை தழைத்து அடர்புதராக நன்கு வேலியாக அமையும். இதனால் இதில் மேயும் ஆடுகள் வெளியே சென்று விடாமல் உள்ளேயே இருக்கும். கிலுவைமுள் வேலியில் இடைவெளி இல்லாமல் இருக்க திருகுக்கள்ளியை நடுவர். இது படர்ந்து

வளர்ந்து வரும். இதனால் வேலியில் இடைவெளியில்லாமல் இருக்கும். 3 வருடங்களுக்கு ஒரு முறை வளர்ந்த மரங்களை வெட்டி பின்னர் குச்சிகளைக் கொண்டு வேலியில் இடைவெளி உள்ள இடங்களில் ஆடிமாதத்தில் நடுவர். மழைக்காலம் முன்பு நடவேண்டும். பின்னர் பெய்யும் மழையில் வேர்பிடித்து நன்கு வளர ஆரம்பிக்கும். வேலியும் நன்றாக அமையும். இதுபோன்று கிலுவைகுச்சி வெட்டி வைத்து நடுவதில் கூலியாட்கள் தேவை. செலவு அதிகம். 3 வருடங்களுக்கு ஒரு முறை இவ்வாறு குச்சிகள் நட்டு வர வேண்டும். இதற்காக சிலர் மாற்று முறையாக கம்பிவேலி போடுகின்றனர். இது போட அடிக்கு ரூ. 24 செலவாகும். சிலர் கிலுவை மரங்கள் இருக்கும் சமயம் வளர்ந்த கிளைகளை மட்டும் வெட்டிவிட தரையை ஒட்டி வேலி அமைக்கின்றனர். இதற்கு கிலுவை மரங்களே தூண்களாக அல்லது பில்லராக இருக்கும். சிமெண்ட் தூண்கள் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. இது 4 அடி உயரம் வேலியாகவும் டைமன் கள் 3 இன்ச் சதுரமாகவும் இருக்க வேண்டும். டைமென்சன் 4 இன்ச் சதுரம் வைக்க ஆடு மண்டையை சொருகி விடும். இந்த வேலியில் செலவும் குறையும். 10 ஆண்டுகள் தாக்கும்பிடிக்கும் என கூறுகின்றனர். இதற்கு அரசு மானியம் தரவேண்டும் என இப்பகுதி விவசாயிகள் கூறி வருகின்றனர்.

திரு. வீராச்சாமி, காத்தசாமிபாளையம்,
சின்னதாராபுரம், திருப்பூர் மாவட்டம்.
செல் : 7010867787

வெள்ளாட்டு வயிறு உப்பிசத்திற்கு

விராட்டிபத்து முத்துதேவர் காலணியில் போதுமணி ஒரு வெள்ளாடு வளர்த்து வருகிறார். இதற்கு மீதமான சாதம் அதிகம் கொடுத்ததால் வயிறு ஊதி இரை எடுக்காமல், நீர் குடிக்காமல் இருந்தது. இதற்கு வெற்றிலை 4, மிளகு 10 எண்ணம், இஞ்சி 10 கிராம், வெள்ளைபூடு 5 பல், கல்உப்பு 10 கிராம் இவைகளை இடித்து தூளாக்கி கொடுக்க சொன்னோம். இதை முதல் நாள் போடவும் மறுநாள் காலையில் கழிச்சல் ஏற்பட்டது. 2 வது நாள் 2 வேளை இதை கடைபிடிக்க ஆடு முற்றிலும் குணமானது.
செல்லம்மாள், சேவா

முறையான கடல் மீன்பிடிப்பு

தமிழ்நாட்டில் பாரம்பரியமாக கடற்கரையோரங்களில் மீனவர்கள் கட்டுமரங்கள், கை துடுப்பு படகுகளை உபயோகித்து மீன்பிடித்து வந்தனர். தற்பொழுது மோட்டார் படகு, விசைப்படகு வைத்து மீன் பிடிக்க மாறிவிட்டனர். சுருக்கு வலை, இழுவை மடி, சிலிண்டர் முறையினால் மீன்கள் முற்றிலும் பிடிக்கப்பட்டு மீன்வளம் அழியும் நிலையிலுள்ளது. தமிழ்நாட்டில் வருடத்தில் 150 நாட்கள் மட்டும் கடலுக்கு சென்று வளர்ந்த மீன்களை மட்டும் தூண்டில் வைத்து பிடிக்கும் முறையை தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டிணம் அருகே கொம்புத்துறை கிராமத்தில் மீனவர் குடும்பங்கள் ஒற்றுமையாக சங்கம் வைத்து முறைப்படி மீன்பிடித்து வருகின்றனர். இந்த கட்டுப்பாடு நெறிமுறைகளை அனைத்து கடலோர கிராமங்களில் செயல்படுத்தப்பட்டால் மீன்வளம் குறையாது. மீனவர்களுக்கும் நல்ல வருமானம் தரும். அண்டை நாட்டு பிரச்சனையும் மீனவர்களுக்கு ஏற்படாது.

கொம்புத்துறை மீன்பிடிப்பு முறை

இவ்வூரில் 160 மோட்டார் படகுகள் உள்ளன. வருடத்தில் 150 நாட்கள் மட்டும் கடலுக்கு செல்வர். வாரத்தில் ஞாயிறு மற்றும் ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளிக்கிழமை கடலுக்கு செல்வதைத் தவிர்ப்பர். வலை வைத்து பிடிக்காமல் தூண்டில் மூலம் பிடிக்கின்றனர். படகுகளில் 9.9 ஹெச்பி மோட்டார் பயன்படுத்து கின்றனர். இது மண்ணெண்ணெய் மூலம் இயக்கப்படும். தமிழ்நாடு அரசு மீனவர்களுக்கு

மாதம் 250 –300 லிட்டர் வரை மானியவிலையில் லிட்டர் ரூ. 25 க்கு மண்ணெண்ணெய் வழங்குகிறது. தூண்டிலில் கிடைக்கும் குஞ்சுமீன்களை பெரிய மீனுக்கு உணவாகவும் மீதியை கடலுக்குள் விட்டுவிடுவர். வளர்ந்த மீன்களை மட்டும் பிடிப்பர். அதிகாலையில் 3 மணிக்கு கடலில் 30–40 கி.மீ. தூரம் வரை பயணித்து மீன் பிடித்துவிட்டு அன்று மாலை 5 மணிக்கு திரும்பி விடுவர். ஒவ்வொரு படகிலும் 2–3 நபர்கள் பயணிப்பர். சுமார் 10–100 கிலோ வரை நித்தமும் மீன் கிடைக்கும். இந்த மீன்கள் சீலா, கேரை, சுறா, பாறை, பண்டாரி போன்ற வகையைச் சார்ந்தது. சில மீன்கள் (கோரை) 100 கிலோ அளவு பெரியதாய் இருக்கும். சுறாமீன் 500 கிலோ – 600 கிலோ எடை இருக்கும். நாங்கள் பிடிக்கும் மீனை சங்கத்திடம் தருவோம். பின்னர் வெளிநாடு, உள்நாட்டு சந்தைகளுக்கு கொண்டு செல்லப்படும். கிடைக்கும் வருமானத்தில் ரூ. 100 க்கு ரூ.1 மட்டும் சங்கத்திற்கு சென்றுவிடும். கடலில் மீன் பிடிக்க விசைப்படகுகளுக்கு மட்டும் 60 நாட்கள் போகக்கூடாது. முந்தைய ஆட்சியில் தமிழ்நாடு மீன் வளத்துறை எங்களின் மீன்பிடிப்பு முறையைப் பாராட்டி பரிசுப்பணம் ரூ. 25,000 எங்கள் கிராமத்திற்கு கிடைத்தது பெருமையாக உள்ளது. அதே போல் இவ்வாண்டும் மதுரை தானம் அறக்கட்டளை மூலம் எங்கள் சங்கத்திற்கு ரூ.25,000 பரிசுத் தொகை கொடுத்து ஊக்கப்படுத்தியுள்ளார்கள்.

கடற்கரையோரம் புதிய தொழிற்சாலைகள் கட்டப்படுவதாலும், பெரிய தொழிற்சாலை கழிவுகளாலும் கடலில் உள்ள பவளப்பாறைகள் அழிந்து வருகின்றன. அனல்மின்சாரம் எடுக்க நிலக்கரி கொண்டு வர கடலில் பாலம் கட்டுவதாலும், எங்கள் வலைகளுக்கும் கேடு உண்டாகின்றது. கடல் அரிமானம் ஏற்படுவதை தடுக்க கல் சுவர் வைக்கின்றனர். இதனால் கடல் அரிமானம் பிற கிராமப்பகுதிகளை அரித்துவிடுகிறது. கடற்கரையில் வளர்ச்சிப்பணிகளை மேற்கொண்டால் சிக்கல் உண்டாகின்றது.

ஏசுதாசன்,
கொம்புத்துறை, காயல்பட்டணம் வழி
தூத்துக்குடி மாவட்டம். செல் : 7397198905

சீர்மிகு சிறுதானியங்கள்

தஞ்சாவூர் மாவட்டம். திருவாரூரில் பல வருடங்களாக சிறுதானியங்கள், மூலிகைப்பொருட்கள் கொண்டு திருமதி. இராஜேஸ்வரிரவிக்குமார் இயற்கை சத்துணவு தயாரிப்புகளை செய்து பல மாவட்டங்களில் விநியோகித்து வருகின்றார். இவர் சிறுதானியங்களின் முக்கித்துவத்தை தெரிந்து பல இடங்களில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி வருகின்றார். இவர் எழுதிய கட்டுரை கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு பக்கம் பொருளாதார ரீதியில் நாடு வளர்ச்சியை நோக்கி வீறுநடை போட்டாலும் இன்னொரு பக்கம் ஊட்டச்சத்து குறைபாடு கொண்ட குழந்தைகள் விகிதம் கனிசமாக இருந்து கொண்டு இருக்கிறது.

இந்த பிரச்சனைக்கு வசதிவாய்ப்பு, பொருளாதாரம் ஆகிய காரணங்களை விட ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா சத்துக்களும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து குறித்த போதிய விழிப்புணர்வு இல்லாததே முக்கிய காரணம்.

இப்படி ஒரு நிலையில் எல்லா வயதினருக்கும் தேவையான சரிவிகித ஊட்டச்சத்து உணவுப் பொக்கிஷமாக நாம் மறந்து போன சிறுதானியங்களில் அதிகமாகக் கிடைக்கிறது.

தற்போது அதிகமாக உட்கொள்ளப்படும் அரிசி, கோதுமை போன்றவற்றில் கார்போஹைட்ரேட்களும் ஆற்றலை வழங்கக்கூடிய சத்துக்களும் தான் அதிகம். மற்ற உணவுப் பொருட்களுடன் ஒப்பிடும் போது இவற்றில் உடலின் ஆரோக்கியமான வளர்சிதை மாற்றச் செயல்பாடுகளுக்கும் வளர்ச்சிக்கும் அறிவாற்றல் பெருக்கத்துக்கும் மிகவும் தேவைப்படுகிற நுண்ணூட்டச் சத்துக்கள், தாதுக்கள், வைட்டமின்கள் குறைவாக உள்ளன என்று உளவியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

சரியான அளவில் நுண்ணூட்டச் சத்துக்கள் நிறைந்த உணவை உட்கொள்ளாததால் மக்களிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு காணப்படுகிறது. குறிப்பாக குழந்தைகள், பெண்கள் அதிக அளவு பாதிக்கப்படுகின்றனர். 50 சதவீதம் கர்ப்பிணிப் பெண்கள் ரத்தசோகை பிரச்சனையால் ஏற்படுவதாகும். உடல்பருமன் ஏற்படுவது கடந்த புத்தாண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட இரண்டுமடங்காக அதிகரித்துள்ளது.

சிறுதானிய உணவுகளை அனைத்து வயதினரும் தினசரி உணவில் இருவேளை எடுத்துக் கொண்டால் குறைந்த உடல்எடை அதிகமான உடல்பருமன் போன்ற பிரச்சனைகள் ஏற்படாமல் சரியான நிறைவான ஆரோக்கியத்துடன் பல நோய்களையும் தவிர்த்து வாழலாம் .

எவையெல்லாம் சிறுதானியங்கள் என்று சொல்லலாம் என்றால், கம்பு, ராகி, சோளம், வரகரிசி, தினையரிசி, சாமை, குதிரைவாலி, பனிவரகு போன்றவைகளை சொல்லலாம். கொள்ளு சாப்பிட்டுவிட்டு குதிரைகளெல்லாம் ஒல்லியாகவும் சுறுசுறுப்புடன் ஓடிக்கொண்டே இருக்கிறது. நாமும் தினசரி கொள்ளு சாப்பிட்டால் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டே இருக்கலாம்.

சிறுதானியங்கள் அரிசி கோதுமைக்கு இணையாக அல்லது அவற்றை விட மேம்பட்டதாகவே இருக்கின்றன. முன்பெல்லாம் மருத்துவர்கள் அரிசி உணவை குறைத்து விட்டு கோதுமை உணவு சாப்பிடுங்கள் என்று சொல்லுவார்கள். ஆனால் இப்போது கோதுமை உணவையும் தவிர்த்துவிட்டு சிறுதானியங்களை சாப்பிடுங்கள் என்று சொல்கிறார்கள்.

பெரும்பாலான சிறுதானியங்கள் கார்போஹைட்ரேட் ஸ்டார்ச் அல்லாத பாலிசாக்ரைடுகள் அதிக அளவு இல்லாத உணவு வகைகளாக உள்ளன. முக்கியமாக குதிரைவாலியில் கார்போஹைட்ரேட் மிகக் குறைவு அனைத்து சிறுதானியங்களிலும் புரதச் சத்துக்களும் நார்ச்சத்துக்களும் நிறைய உள்ளன. நார்சத்தானது சிறுதானியங்களைச் குறைந்த கிளைசெமிக் உணவு வகைகளாக ஆக்குவதால் இந்த உணவு வகைகள் நீரழிவு நோயைக் கட்டுக்குள் வைக்கின்றன.

சிறுதானியங்களில் தாதுக்கள் 1.7 – 4.3 கிராம் (100 கிராமிற்கு) வரை இருக்கும். இது கோதுமை (1.5 சதவீதம்) அரிசி (0.6 சதவீதம்) போன்றவற்றில் இருப்பதை விடப் பல மடங்கு அதிகம். கோதுமையை விடக் கேழ்வரகில் கால்சியம் 8 மடங்கு அதிகம். இது எலும்புப் புரை போன்ற நோய்களைத் தடுக்கவல்லது.

குதிரைவாலியும், கம்பும் சாப்பிட்டால் இரும்புச்சத்து மாத்திரையே சாப்பிட தேவையில்லை. கேழ்வரகு சாப்பிட்டால் பாலும் தேவையில்லை. கால்சியம் மாத்திரைகளும் தேவையில்லை. வரகரிசியில் உள்ள எண்ணெய் மூட்டுக்களுக்குத் தேவையான பசைத்தன்மையைக் கொடுத்து மூட்டுத் தேய்மானம் ஏற்படாமல் பாதுகாக்கிறது. சாமை அரிசியில் வைட்டமின் பி நிறைய இருக்கிறது. அல்சர் எனப்படும் வயிற்றுப்புண் ஏற்படாமல் தடுக்கிறது. தினையை குத்தக் குத்த உமிதான் வரும். அப்படி ஒரு நார்சத்தும் நுண்ணூட்டச்சத்துக்களும் அதிகம். தினை சாப்பிடு அது உனை நாள்தேறும் காக்கும் என்பார்கள். கம்பு சாப்பிட்டால் கடைசி வரை கம்பு ஊன்றாமல் நடக்கலாம் என்பர்.

மேலும் அந்த காலத்தில் திருமண மாப்பிள்ளைகளை மாப்பிள்ளை சம்பா அரிசி சாப்பிடச் சொல்வார்களாம். மூங்கில் அரிசி சாப்பிட்டால் உடல் மூங்கில் போல உறுதியும் இருக்குமாம். கருப்புக்கவுனி அரிசி என்பது அந்த காலத்தில் மன்னர்கள் மட்டுமே சாப்பிடும் அரிசியாம்.

பனிவரகு என்ற ஒரு சிறு தானியம் புற்றுநோய் சிகிச்சையில் இருப்பவர்களுக்கு மிகச் சிறந்த மருத்துவ உணவாக இருப்பதாக கூறுகிறார்கள்.

இப்படியான சிறப்புகள் காரணமாகச் சிறு தானியங்கள் ஊட்டச்சத்து வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.

சிறுதானியங்களில் கஞ்சியும் கூழும், களியும் மட்டும் தான் சமைக்க முடியும் என்ற நிலை மாறி இப்போது அடை தோசை, சப்பாத்தி, வடை, கொழுக்கட்டை, பொங்கல் என்று பல வகைகளில் வித்தியாசமான உணவுகளை செய்து குழந்தைகளுக்கும் அனைத்து வயதினருக்கும் கொடுக்கலாம். சிறுதானியங்களை மதிப்பு கூட்டி உணவுப்பொருட்களாக தற்போது வணிக வளாகங்களில் கிடைக்கிறது.

சிறுதானியங்களை உணவில் அறிமுகப் படுத்தியதன் விளைவாகக் குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டு நோய்கள் பெருமளவு குறையும்.

இப்படி பல தன்மைகளைக் கொண்டுள்ள சிறுதானியங்களின் உற்பத்தியும் உட்கொள்ளப்படும் அளவும் பல ஆண்டுகளாகக் குறைந்து கொண்டே வருகிறது. இந்தியாவில் 1960களில் 1.9 கோடி ஹெக்டேரில் விளைவிக்கப்பட்ட சிறுதானியங்களின் பரப்பளவானது கிட்டத்தட்ட 49 சதவீதம் குறைந்து 2020 ல் 97 லட்சம் ஹெக்டேராகக் குறைந்துள்ளது. குறிப்பாக சாமை, வரகு, குதிரைவாலி, தினை போன்ற சிறுதானியங்களைப் பாரம்பரியமாக உற்பத்தி செய்யும் மாவட்டங்களான தருமபுரி, பெரம்பலூர், அரியலூர், திருச்சி போன்ற மாவட்டங்களில் இந்த சிறுதானியங்களின் உற்பத்தி பரப்பளவு 90 சதவீதத்திற்கும் அதிகமாக சரிந்துள்ளது.

சிறுதானியங்கள் பயன்களைக் கருத்தில் கொண்டு, உட்கொள்ளும் முதன்மை உணவு வகைகளில் ஒன்றாக சிறுதானியங்களைச் சேர்க்கவும். சிறுதானியங்களின் உற்பத்தியை அதிகரிக்கவும் அரசு எடுக்கும் முயற்சி பாராட்டத்தக்கது தினை, கேழ்வரகு, கம்பு, சோளம் போன்ற தானியங்கள் பரவலாக கிடைக்கின்றது. இந்த தானியங்களைப் போல பனிவரகு, வரகு, குதிரைவாலி, சாமை போன்ற சிறுதானியங்களும் கிடைக்க செய்ய வேண்டும். நன்மைகள் பற்றிய விழிப்புணர்வு தற்போது அதிகமானதால் சிறுதானியங்களின் நுகர்வு அதிகரித்திருக்கிறது. அதனால் சிறுதானியங்களின் விலையும் 5 ஆண்டுகளில் இரட்டிப்பாகியிருக்கிறது. வரும் ஆண்டுகளில் சிறுதானிய பயன்பாடு மக்களிடையே இன்னும் அதிகமாகும். நுகர்வும் அதிகமாகும். விவசாயிகளை சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க ஊக்குவிப்பது அவசியம் அப்போது தான் விலைக்குறைய சாத்தியம். சிறுதானியம் பயிரிடுதலில் மகிழ்ச்சி தரும் விஷயம் என்னவென்றால் குறைவான தண்ணீர் போதும். இடுபொருள் தேவையில்லை. பருவ நிலை மாற்றத்தையும் தாங்கும் தன்மை கொண்டவை. வறண்ட காலத்திலும் பயிரிடலாம். 60–90 நாட்களில் அறுவடை செய்து விடலாம். நம் மத்தியஅரசின் முயற்சியால் 2023 ஆம் ஆண்டை ஐ.நா.சபை உலக சிறுதானிய ஆண்டாக அறிவித்தது. உலக மக்களிடையே சிறுதானியங்களைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவது, வளம் குன்றா வளர்ச்சி இலக்குகளின் முக்கிய இலக்குகளான பட்டிணியைக் குறைத்தல், உணவுப் பாதுகாப்பின்மை,ஊட்டச்சத்துக் குறைபாடு பிரச்சனைகளைக் குறைத்தல், நோயில்லா சமுதாயத்தை உருவாக்குதல், சுற்றுச்சூழல் சீர்கேட்டைக் குறைத்து மண்ணின் வளத்தையும் அதிகப்படுத்துவது போன்ற இலக்குகளை வரும் ஐந்தாண்டுகளில் அடைவதற்கும் உதவியாக இருக்கும்.

திருமதி. இராஜேஸ்வரி ரவிக்குமார்
சுகுணா இயற்கை உணவகம்,
எண்: 74 சி.கே.கே.எம். கார்டன், காருகுடி கிராமம், திருவாரூர் – 613204. செல் : 9488574308

இயற்கை மக்காச்சோளம் பயிர் செய்தல்

மானாவாரிநிலத்தில் முதலில் நிலத்தை உழுது மக்காச்சோளம் விதைத்தபின் முளைத்துவரும் இளம் பயிர்களை முயல் கடிக்கும். இதற்கு முளைத்த 15 நாட்களில் மீன்அமிலோஅமிலம் தயார் செய்து தெளிக்க வேண்டும். மக்காச்சோளம் வளர்ந்த பின் 20 நாட்களில் அமுதக்கரைசல் ஒரு முறை தெளிக்கலாம். பின்னர் விதைத்த 1 மாதத்தில் மேலுரமாக கனஜீவாமிர்தம் ஓர் ஏக்கருக்கு 100 கிலோ இட வேண்டும். இதனை அடியுரமாக விதைக்குமுன்னரும் 100 கிலோ இடலாம். மீன் அமிலோ அமிலம் அமிர்தக் கரைசல் கனஜீவாமிர்தம், தயாரிக்கும் முறை கீழே தரப்பட்டுள்ளது. இயற்கை உரமிடும் சமயம் பூச்சித் தாக்குதல் குறைவாகவே காணப்படும்.

அமிர்தக்கரைசல் தயாரித்தல் :

தயாரிக்கும் முறை : முதலில் பசு சாணம் 15 கிலோ மற்றும் பசு கோமியம் (பசும் சாணம் புதியதாக இருத்தல் வேண்டும்) 15 லிட்டர் இரண்டையும் ஒரு பாத்திரத்தில் அல்லது வாளியில் பிசைந்து சேர்க்க வேண்டும். இத்துடன் 1.5 கிலோ வெல்லத்தை தூள் செய்து சேர்க்க வேண்டும். இந்தக் கலவையை 2 நாட்கள் நிழலான இடத்தில் வைக்க வேண்டும். மேலும் அந்தக்கலவையில் கொசுக்கள் முட்டையிடுவதைத் தவிர்க்க பிளாஸ்டிக் அல்லது அட்டையை வைத்து மறைத்துக் கொள்ளலாம். இதனை பயிர்களுக்கு தெளிக்கும் சமயம் ஒரு பங்குக் கரைசலுடன் 10 பங்கு தண்ணீர் சேர்த்து பயிர்களுக்குத் தெளிப்பான் மூலம் தெளிக்கலாம். ஓர் ஏக்கருக்குப் பத்து தெளிப்பான் டேங்க் அளவுக்குத்

தெளிக்கலாம். கை தெளிப்பான் கொண்டு தெளிப்பது நல்லது.

மீன் அமினோ அமிலம்

ஒரு கிலோ மீன் கழிவுடன் ஒரு கிலோ வெல்லம் (கழிவு வெல்லம் குறைந்த விலையில் கிடைக்கும்), வாழைப்பழம் 3 சேர்த்து ஒரு பாத்திரத்தில் அப்படியே 30 நாட்கள் வைத்து விடவும். இதிலிருந்து சுமார் 600–700 மி.லி. கரைசல் கிடைக்கும். இதனை தெளிப்பானில் 10 லிட்டர் நீருக்கு 100 மி.லி கரைசல் என்ற விகிதத்தில் சேர்த்து தெளிக்கலாம். நட்ட 20 நாளிலிருந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க பயிர் இரசாயன உரம் இல்லாமலேயே செழித்து வளரும். ஓர் ஏக்கருக்கு போதுமானது.

கனஜீவாமிருதம்

நாட்டு மாட்டு சாணம் 10 கிலோ, நாட்டு மாட்டு கோமியம் 10 லிட்டர், பயறு வகை மாவு 2 கிலோ, வெல்லம் 2 கிலோ அல்லது பப்பாளி அல்லது பனம்பழம் 2 கிலோ, உயிரோட்டமான நீர் 200 லிட்டர், ஒரு கைப்பிடி மண் (வரப்பு மண் அல்லது ஈரமான காட்டுமண்) சேர்த்து புளிக்க விட வேண்டும். 12 மணி நேரம் கழித்து 7 நாட்கள் வரை இதனை பயன்படுத்தலாம். இதுவே ஜீவாமிருத கரைசல் ஆகும். சாணி 500 கிலோ எடுத்து 1 பேரல் ஜீவாமிருதக் கரைசலில் கலந்து சாந்து மாதிரி குழைத்து 48 மணி நேரம் தென்னை ஓலை கொண்டு மூடிவைக்க வேண்டும். பின்னர் 48 மணி நேரம் ஆன பின் நிழலில் 2 – 3 நாட்கள் உலர வைத்து, சணல் சாக்கில் கட்டி ஒரு வருடம் வரை பயன்படுத்தலாம். இந்த கனஜீவாமிருதத்தை ஏக்கருக்கு ஒரு பயிர் பருவத்திற்கு 400 கிலோ அளவில் தூவிவிடலாம். இதனை 20 நாட்களுக்கு ஒரு தடவை சுமார் 100 கிலோ தூவ வேண்டும்.

தமிழ்மணி
வைத்யலிங்காபுரம்
ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா
விருதுநகர் மாவட்டம்
செல் : 9245134568

தவுடம்மாளின் ஆன்மீக அனுபவங்கள்

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே உள்ள காக்கிவாடன்பட்டி கிராமத்தில் அண்மையில் காலம் சென்ற திருமதி. தவுடம்மாள் பசுமடம் நடத்தி வந்தார்கள். இதில் 230 பசுக்கள், வயதான மாடுகளை வைத்து பராமரித்து வந்தார். இவர் மாடுகளுக்கு மூலிகை வைத்யம் செய்து வருவார். பசுமாடுகளை பராமரிக்கப் பணம் பற்றாக்குறைக்கு தனது நிலம், சொத்துக்களை விற்று பராமரித்தார். பலரிடமும் சென்று நன்கொடை பெற்று வந்தார். இவர் பக்தி செய்து தான் பெற்ற அனுபவங்களை கூறி வருவார். ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காரணம் அடிப்படையாகும் என்று உறுதியாகக்கூறுவார். இவர் கூற்றை பெரும்பான்மையோர் நம்புவதில்லை. இவர் கூறும் சில அனுபவங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

திதி சாப்பாடு உண்டதால் மாடுகளுக்கு உண்ணி பிடித்தல்

கேரளாவில் உள்ள குருவாயூரப்பன் கோவிலுக்கு மாதந்தோறும் போய் வந்தேன். ஒரு சமயம் கோவிலின் மேற்குப் பகுதியில் திறந்த வெளியில் ஒருவர் அன்னதானம் செய்து கொண்டிருந்தார். கோவில் நிர்வாகத்தினருடைய அன்னதானம்தான் என்று கருதி பிரசாதத்தை சாப்பிட்டேன். பொதுவாக கோவில் நிர்வாகத்திலிருந்து நடத்தப்படும் அன்னதானம் மாடியில் உள்ள மண்டபத்தில்தான் நடைபெறும். மாடியில் வரிசையில் நின்று செல்வதற்கு அசௌகரியமாக இருந்ததால் கீழே நடைபெற்ற தனியார் அன்னதானத்தில் பிரசாதத்தை சாப்பிட்டேன். குருவாயூரிலிருந்து ஊர் திரும்பியதும் எங்கள் மாடுகளுக்கு உண்ணி பிடிக்க ஆரம்பித்தது. உண்ணிகள் பெருகி இரண்டு மாடுகள் இறந்து விட்டன. எதற்கு திடீரென்று உண்ணி பிடித்தது என்று நினைத்துக் கொண்டு தூங்கிவிட்டேன். குருவாயூரில்

தனியார் செய்த அன்னதானம் இறந்தவர் குறித்து நடத்தப்பட்ட திதி சாப்பாடு என்று இறைவன் கனவில் கூறினார். இதனால் மீண்டும் ஒரு முறை குருவாயூர் சென்று கோவில் பிரசாதத்தை மட்டும் சாப்பிட்டு வந்தேன். பின்னர் மாடுகளுக்கு வைத்யம் செய்து சரிப்படுத்தினோம். பக்திநிலையில் உள்ளவர்கள் அனுஷ்டானத்தை சரியாக கடைபிடிக்காவிட்டால் பாவங்கள் நுழைந்து நமது முன்னேற்றத்திற்கு தடைபோடும்.

கிளிகள் வீட்டை விட்டு பறந்து ஓடக்காரணம்

எனது வீட்டில் இரண்டு கிளிகள் வளர்த்து வந்தோம். இந்த கிளிகளை ஒருவர் காப்பாற்றிக்கொண்டு வந்து எங்கள் வீட்டில் விட்டுவிட்டார். இந்த கிளிகள் சில ஆண்டுகள் எங்களிடம் இருந்தன. பக்கத்து ஊரிலிருந்து ஒரு நோய்வாய்ப்பட்ட ஒரு பெண்மணி தன்னை கடைசி காலத்தில் பராமரிக்க சுற்றத்தாரால் இயலவில்லை என்றும் எங்கள் வீட்டிற்கு வந்துவிடுவதாக கூறினார். எங்கள் பசு பராமரிப்பிற்கு நன்கொடையாக ரூ. 10,000 கொடுத்து விடுகிறேன் என்றும் கூறினார். நானும் இதற்கு சம்மதப்பட்டேன். இந்த பெண்மணி வந்த சில நாட்களில் எங்கள் வீட்டில் இருந்த இரண்டு கிளிகளும் பறந்து ஓடிவிட்டன. இந்த பெண்மணி தனது இளமையில் நல்ல நடத்தை இல்லாமல் இருந்தது எனக்கு தெரியும். ஓர் இரவில் இறைவன் கனவில் தோன்றி ஒரு பாவம் நுழைந்தால் ஒரு புண்ணியம் பறந்துவிடும் என்றார். இந்தப் பெண்மணியிடம் பாவம் குடி கொண்டிருந்தது. கிளி புண்ணியத்தின் அம்சமாகும். இதனால் எங்கள் வீட்டு கிளிகள் பறந்து போனதின் காரணத்தை அறிந்து கொண்டேன். ஒரு பாவம் வரும் சமயம் ஒரு புண்ணியம் பறந்துபோகும்

மலைமாடு வனத்தில் மேய்க்க தடை

"சேவா" நிறுவனர் என்னிடம் வந்து கிடைமாட்டுக் காரர்களின் மேய்ச்சல் பிரச்சனைக்கு பல முறை வனத்துறை அதிகாரிகளிடம் முறையிட்டும் அனுமதி கிடைக்கவில்லையே எனக்கூறினார். மலையில் வனப்பகுதியில் மாடுகளை மேய்க்க அனுமதி பெற பல வருடங்கள் இவர் முயற்சி எடுத்து வருகிறார். அன்று இரவு கனவில் கிடைமாட்டுக்காரர்களிடம் பாவங்கள் நிரம்பி உள்ளதால் காரியம் எப்படி கைகூடும் என்று இறைவன் கூறினார். மது அருந்தும் கணவரிடம் நீ போராடுவது போன்று அவரும் கிடைமாட்டுக் காரர்களிடம் போராடி வருகிறார் என்பது போன்று காட்டியது. கிடைமாட்டுகாரர்கள் கன்றுகளையும், வயதான மாடுகளையும் அடிமாட்டிற்காக கொடுப்பதால் அவர்களிடம் பாவங்கள் உள்ளன. பாவங்கள் உள்ள இடத்தில் காரியம் கைகூடாது

தோஷம் நீங்க மாடு பலியானது

எங்கள் துவாரகா கிருஷ்ணர் கோவிலில் ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் சனிக்கிழமை அன்றும் தமிழ் வருடப்பிறப்பு அன்றும் அன்னதானம் நடத்துவோம். அன்னதானம் நடக்கும் அன்று காலையிலிருந்து மதியம் வரை கோவிலில் பஜனை நிகழ்ச்சி நடைபெறும். ஒரு முறை சித்திரை வருடப்பிறப்பு அன்று கோவிலில் ருக்மணி கல்யாணம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஒருவர் தனது மகளுக்கு நல்ல முறையில் திருமணம் நடைபெற வேண்டும் என்று வேண்டியிருந்தார். ருக்மணிக்கு தாலிக்கயிற்றில் முக்கால் பவுன் நகை சேர்த்திருந்தார். இதற்குப் பின் மாடு பராமரிக்க பணம் இல்லை என்று சிவகாசியில் ஒரு கடையில் இந்த தாலியை விற்று ரூ. 2000/– பெற்று வந்தேன். இதை வைத்து மாடு பராமரிக்க பயன்படுத்தினேன். இச்சமயத்தில் ஒரு மாடு திடீரென இறந்து விட்டது. அவர் மகளின் தோஷம் நீங்கியதால் ஒரு மாடு பலியாகிவிட்டது என்று எனக்கு காட்டியது.

மழை பெய்து பருத்தி பயிரைக் காப்பாற்றியது

ஒரு சமயம் கரிசல் காட்டில் பருத்தி விதைத்து நன்றாக பயிர் இருந்தது. எங்கள் ஊரில் பல விவசாயிகள் நூற்றுக்கணக்கானநிலத்தில் பயிரிட்டு இருந்தனர். பூப்பிடித்து பிஞ்சு இறங்கியிருந்தது. இச்சமயத்தில் மழையில்லாமல் வாடியது. மழையில்லையெனில் வெள்ளாமை குறைந்துவிடும். அப்பொழுது சிலர் நீங்கள் இறைவனிடம் பக்தியாக உள்ளீர்கள். இறைவனிடம் சொல்லி மழையைக் கொண்டுவர முடியுமா? எனக்கேட்டனர். நானும் இதை நினைத்து தூங்கிவிட்டேன். கனவில் கீழ்க்கண்டவாறு காட்டியது. உங்கள் ஊர் ஜாதகப்படி இந்தச் சமயத்தில் மழை பெய்ய வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. பக்தவிஜயம் என்ற புத்தகத்தில் உள்ள சுமார் 85 பக்தர்களின் கதைகளில் 13 கதைகள் படித்தால் வெளியூரிலிருந்து மேகத்தை கடனாக வாங்கிவந்து மழை பெய்ய வைப்பேன் எனக்காட்டியது. நானும் சில பெண்மணிகளும் சேர்ந்து சில நாட்களில் பக்த விஜயம் என்ற புத்தகத்தை தருவித்து அதில் உள்ள 85 கதைகளையும் முழுதாகப் படித்துவிட்டோம்.

பின்னர் சில நாட்களில் மேகம் கூடி எங்கள் கிராமத்தைச் சுற்றி சரியான மழை பெய்தது. கண்மாய்க்கும் தண்ணீர் வந்துவிட்டது. நல்ல பருத்தி விளைச்சலும் கிட்டியதை நினைத்து அனைவரும் மகிழ்ச்சி அடைந்தோம்.

குறிப்பு : தவுடம்மாள் புத்தகத்திலிருந்து தொகுத்தது. இந்தப் புத்தகம் வேண்டுவோர் சேவா, மதுரை முகவரிக்கு ரூ. 50 அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

ஊரணி ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

எங்கள் ஊர் பூதலாபுரம் கிராமத்தில் 3 ஊரணிகள் உள்ளன. இதில் கூளப்பன் ஊரணி இருக்குமிடமே தெரியாமல் 1/2 ஏக்கரில் மாத்திரமே தெரிந்தது. இந்த ஊரணியின் மொத்தப் பரப்பளவு 3 ஏக்கர் 80 சென்டாகும். இவ்வூரணியின் பெரும் பகுதியை 4 விவசாயிகள் ஆக்கிரமித்து விவசாயம் செய்து வந்தனர். இவர்கள் ஆக்கிரமித்துச் செய்த ஊரணியை மீட்பதற்கு இவ்வூரில் உள்ள பெரியவர்கள் முயற்சி எடுக்கவில்லை. எங்கள் ஊருக்கு அருகாமையில் உள்ள கிராமத்தால் ''தானம் அறக்கட்டளை''யின் வயலகக் குழு மூலம் கண்மாய் வேலை பார்த்து வியப்படைந்தேன். அவர்களுடன் சென்று எங்கள் ஊரிலும் இதே போன்று கண்மாய் சீரமைப்பு வேலை செய்ய வேண்டும் என்று கேட்டேன். அவர்கள் வயலகக்குழு ஒன்றை அமைக்கச் சொன்னார்கள். அதே போன்று ஒரு குழு ஏற்படுத்தி கிராமசபையில் ஆக்கிரமிப்புகளை அகற்றத் தீர்மானம் போட்டு அதை மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்தோம். அதற்குப்பின்னர் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது. ஊரணி தூர்வாறுவதற்கு மொத்த மதிப்பீடு ரூ. 1,20,000 எனக் கணக்கிடப்பட்டது. எங்கள் ஊர் பங்காக ரூ. 20,000 கொடுக்கப்பட்டது. மீதிப்பணம் ரூ. 1லட்சம் வயலகம் மூலமாகப் கொடுக்கப்பட்டு வேலை முடிந்தது. இந்த கூளப்பன் ஊரணியில் நீர் நிரம்பியுள்ளது. இதனால் ஊர்க்காரர்களுக்கும். கால்நடைகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. தற்பொழுது ஊர்க்காரர்கள் அனைவரும் எங்களைப் பாராட்டுகின்றனர்.

பி.வரதசுப்புலெட்சுமி, 1/26, பூதலப்புரம் அஞ்சல், விளாத்திகுளம் தாலுகா.தூத்துக்குடி மாவட்டம் – 628905. செல்: 6383110613

''கொரங்காடு'' –மானாவாரி மேய்ச்சல் நிலம்

தமிழ்நாட்டில் திருப்பூர், கரூர், திண்டுக்கல், கோயம்புத்தூர் மாவட்டங்களில் குறிப்பாக சின்னதாராபுரம், வெள்ளக்கோயில், காங்கேயம், திருப்பூர், மூலனூர் பகுதிகளில் வறண்ட பூமியில் வெல்வேலா மரங்களுக்கிடையில் கொழுக்கட்டை புல் சாகுபடி செய்யப்பட்டு மேய்ச்சல் நிலமாகப் பயன் படுத்தப்படுகின்றது. இதை ''கொரங்காடு'' என்றழைப்பர்.

கொரங்காடு பெயர்க்காரணம்:

பொதுவாக உழவர்கள் நிலத்தை உழவு செய்யாமல் வேறு எந்த வேளாண்மையும் செய்யாமல் அப்படியே புற்கள் முளைக்க விட்டுவிட்டால் அதனை ''கொறை'' என்று கூறுவார்கள். அந்த முறையில் கொரங்காடுகளில் காணப்படும் கொழுக்கட்டைப் புல் தானாக முளைத்திருக்கக் கூடும். அதை கால்நடைகள் விரும்பி உண்பதால் அதனை வேலி அடைத்து பாதுகாத்து வந்திருக்கின்றனர். இம்முறை மூலம் இதற்கு கொரங்காடு என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கொரங்காடு நிலம் கோயம்புத்தூர், திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 3,841 சதுர கிலோமீட்டர்

விஸ்திரணத்தில் (3,84,100 ஹெக்டேர்) உள்ளது என அனில்குமார் குழு (2011) கூறுகிறது. இது மழைமறைவு பகுதியில் மழைப்பொழிவு 650 மி.லி அளவுக்குக் குறைவாக பெய்யும் இடங்களாக உள்ளது. 1855 –1887 வருடங்களில் பயிடப்படாத, உபயோகமற்ற நிலங்களில் விவசாயிகள் மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்துவதற்கு குத்தகை நிலமாக, வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. அப்பொழுது ஆட்சியில் இருந்த பிரிட்டிஷ்காரர்கள் நிலத்தீர்வை மூலம் வருமானம் பெறுவதற்கு விவசாயிகளுக்கு கொடுத்திருக் கின்றார்கள். இதற்கு பின்னர் விவசாயிகள் வேலி அமைத்து கிணறுகள் வெட்டி சீர்படுத்தியுள்ளார்கள். சுமார் 6 தலைமுறைகளுக்கு முன்னர் (150 வருடங்கள்) இது நிகழ்ந்திருக்கலாம்.

மண் வகை

இப்பகுதியில் செம்மண் கலந்த சரளை பூமியாகும். இந்நிலத்தில் தோண்டினால் சரளைக் கற்கள் ஏராளமாக உள்ளதைக் காணலாம். 2–3 ஆண்டுகளுக்கு ஒரு முறை சரளை கற்களை நிலத்திலிருந்து அகற்றுவர்.

கொரங்காட்டில் கொழுக்கட்டைப்புல், நரிப்பயறு, கொள்ளு கலப்பு விதைப்பு செய்யப்படுகிறது. கொரங்காட்டில் வெல்வேல் மரங்களுக்கிடையில் கொழுக்கட்டைப்புல் பல்லாண்டுகளாகவே தொடர்ந்து வளர்ந்து வருகின்றது. இது மழையை நம்பியே உள்ளது. ஆடி மாதத்தில் ஓர் உழவு செய்யப்படுகின்றது. பின்னர் ஆவணியில் அல்லது மழை பெய்யும் பருவத்தில் நரிப்பயறு விதைக்கப்படுகின்றது. கொரங்காட்டில் கால்நடைகள் தன்னிச்சையாக மேய்ச்சலுக்கு விடப்படுகின்றன. அவரவர் காட்டைச் சுற்றி கிலுவை முள்வேலி இடப்பட்டு கட்டாப்பு அல்லது உயிர்வேலி உண்டாக்கப்பட்டுள்ளது.

கொரங்காட்டில் காணப்படும் தாவரங்கள்

கொரங்காட்டில் கொலுக்கட்டைப்புல் தவிர கரட்டுப்புல், அரிசிப்புல், தாதரப்புல், ஒட்டனபுல், நத்தைச்சூரி, மூங்கில்புல், சீகம்புல், அருகம்புல் போன்றவையும் மற்றும் பிற தாவரங்களான செப்பு நெருஞ்சி, சவரிக்கொடி, பூனைப்புடுக்கொடி, கொள்ளு, நரிப்பயறு, மிஷ்டத்தழையும் வேலியில் முள்ளுகிலுவை, மின்னமரம், கள்ளி, ரயில் கற்றாழை போன்றவையும் காணப்படும். கொள்ளும் நரிப்பயறும் ஒவ்வொரு வருடமும் விதைக்கப்பட்டு தீவனமாக பயன்படுத்துகின்றனர். இவை தவிர வெல்வேலாமரம், உசிலைமரம், வேப்பமரங்கள் போன்றன பரவலாகக் காணப்படும். ஓர் ஏக்கரில் சுமார் 20–60 மரங்கள் பராமரிக்கப்படுகின்றன. 10 வருடங்களான மரங்களை வெட்டி வருமானம் எடுக்கின்றனர். வெல்வேலம் மரத்திலிருந்து கிடைக்கும் நெற்றுகள் கோடை காலத்தில் தீவனமாக பயன்படுகிறது.

கொரங்காட்டிலிருந்து கிடைக்கும் வருமானம்

ஒவ்வொரு விவசாயிக்கும் சராசரியாக 2–15 ஏக்கர் வரை கொரங்காடு மேய்ச்சல் நிலம் இருக்கும். இதில் ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் மேய்ச்சல் நிலம் இருப்பதாக எடுத்துக் கொண்டால் அதில் விவசாயிகள் அடையும் பயன்கள் மற்றும் வருமானங்கள் கீழ்க்கண்டவாறு கிடைக்கும்.

இந்த 5 ஏக்கர் நிலத்தில் செம்மறி ஆடுகள் 20, பசுமாடு 2 மாடுகள், எருமை 1 வளர்ப்பர். இதில் ஆடுகள் மூலம் வருடத்திற்கு சுமார் ரூபாய் 40,000 வருமானம் கிடைக்கும். பசுமாடு மூலம் 10,000 ரூபாயும், எருமை மூலம் ரூபாய் 10,000 மும் வருமானம் கிடைக்கிறது. மரங்கள் விற்பதன் மூலம் பத்து வருடங்களுக்குப் பின் ரூபாய் 10,000–20,000 வரை கிடைக்கும். ஆக கிடைக்கும் மொத்த வருமானம் 10 வருடங்களில் ரூபாய் 6,20,000 வருமானம் கிடைக்கும். ஆண்டிற்கு ரூபாய் 60,000 வருமானம் கிடைக்கும்.

கொரங்காடு பராமரிக்க ஆகும் செலவு :

சுமார் 5 ஏக்கருக்கு உழவு செட் ஒரு வருடத்திற்கு மட்டும் ஒரு முறை ஒரு உழவு செய்ய ரூ. 2000, கொழுக்கட்டைப் புல் நிலத்தில் கொள்ளு மற்றும் நரிப்பயறு விதைக்க ரூ. 2000, பராமரிக்க, களை எடுப்பதற்கு ரூ. 2000, பாதுகாப்பு வேலி அமைக்க முள் வெட்ட கூலி ரூ. 3000, உயிர்வேலி அமைக்க ரூ. 6000, வெல்வேலா மரத்தினைப் பராமரிக்க ரூ, 1000. ஒரு வருடத்தில் ஆகும் மொத்த செலவு ரூ. 16,000. பத்து வருடங்களில் ஆகும் செலவு ரூ. 1,60,000. 10 வருடங்களில் நிகர வருமானம் சுமார் ரூ. 4–5 லட்சம் கிடைக்கும். வருடத்திற்கு சுமார் ரூ. 50,000 நிகர வருமானம் கிடைக்கும்.

கால்நடை வளர்ப்பு

இப்பகுதியில் முன்பு காங்கேயம் மாடுகள் அதிகமாக வளர்க்கப்பட்டன. பின்னர் விவசாயம் இயந்திர மயமானதால் காங்கேயம் உழவு மாடுகளின் தேவை குறைந்து விட்டது. இதனால் கலப்பின பசுக்களை

கொரங்காட்டில் மேய்த்து விவசாயிகள் வருமானம் பார்க்கின்றனர். தற்சமயம் செம்மறி ஆடு வளர்ப்பு குறிப்பாக மேச்சேரி இன செம்மறி ஆடுகள் கொரங்காட்டில் வளர்க்கப்பட்டு வருமானம் பார்க்கின்றனர். கொரங்காட்டில் வெள்ளாடு பராமரிக்கப்படுவது மிகவும் குறைவு. கொரங்காடு நிலம் ஆகஸ்டு மாதத்திலிருந்து பிப்ரவரி மாதம் வரை மேய்ச்சலுக்குப் பயன்படுத்தப்படும். மேய்ச்சலுக்கு இக்காலங்களில் தென் மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழையினால் புற்கள் நன்றாக வளர்ந்திருக்கும். மார்ச் மாதத்திலிருந்து ஜூலை வரை புற்கள் காய்ந்து விடும். இச்சமயத்தில் சோளம், கம்பு தட்டைகள், கடலைக்கொடி போன்ற உலர் தீவனங்களை ஆடு மாடுகளுக்குக் கொடுத்து வருவார்கள்.

வடகிழக்கு பருவமழை சமயம் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை மாதங்கள் வரை 4 மாதங்களுக்கு மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்தலாம். 10 ஏக்கர் கொரங்காட்டில் 10 வெள்ளாடுகள் அல்லது 2 பால் மாடுகள் + 4 கன்று குட்டிகள் அல்லது 3 எருமை மாடுகள் அல்லது 20 செம்மறியாடுகள் வளர்க்கலாம்.

கொரங்காட்டு வேலி

கொரங்காட்டில் வேலியாக முள்கிலுவை ஊன்றப்படுகிறது. தற்சமயம் சில வயதான விவசாயிகளே வேலியை 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை காய்ந்த கிலுவையை அகற்றிவிட்டு புதிதாக முள்ளு கிலுவையை நட்டி வேலியை சீரமைப்பார்கள். இயற்கை வேலிக்கு பதிலாக தற்சமயம் கம்பிவேலி அமைத்தலை பல விவசாயிகள் கடைபிடித்து வருகின்றனர். கம்பிவேலி சுமார் 10 வருடங்களுக்கு தாக்குபிடிக்கும். ஆனால் செலவு அதிகம்.

கொரங்காடு பராமரிப்பு

கொரங்காடு 3–4 ஆண்டுகளுக்கு ஒரு முறை உழவு செய்யப்படும். வறட்சியால் புற்கள் காய்ந்து விட்டால் தேவைப்பட்டால் கொழுக்கட்டை விதை மறுவிதைப்பு விதைப்பர். கொரங்காட்டில் 1–2 வருடங்களுக்கு ஒரு முறை நரிப்பயறு மற்றும் கொள்ளு விதைத்துத் தீவனப்பயிறாகப் பராமரிப்பர். உயிர் வேலியானது 2–3 ஆண்டுகளுக்கு ஒரு முறை காய்ந்த குச்சிகளை அகற்றி புதுக்குச்சிகள் சுமார் 2 அடி உயரமுள்ளதை ஆடி மாதத்தில் நடவு செய்வர். மழைக்காலத்திற்கு முன்பாக நட வேண்டும்.

கொரங்காட்டில் வெல்வேலா மரங்கள் ஒரு ஏக்கருக்கு 20–60 மரங்கள் வரை பராமரிப்பர். சுமார் 10 வருடங்களில் மரம் வளர்ந்ததும் வெட்டி விற்பனை செய்வர். பின்னர் முளைத்து வரும் சிறிய மரங்களை வளர்ச்சி அடைய விட்டுவிடுவர். மரத்தின் நெற்றுக்கள் கோடை காலத்தில் தீவனமாகப் பயன்படும். கால்நடைகளுக்குப் போதுமான நிழலும் கொடுக்கும். கொரங்காட்டு மேய்ச்சலினால் ‘‘காங்கேயம்’’என்ற நாட்டு ரகப் பசுவின் பால் சுவையுடனும், கொழுப்புச் சத்து கூடியும் உள்ளது. இந்த மேய்ச்சல்தரை உள்ளதால் இங்குள்ள மாடுகளுக்கு சினைக்கு வராமல் போகும் கோளாறுகள் வருவதில்லை. இந்த புல்தரை மண்ணின் ஈரத்தையும், வளத்தையும் காக்கின்றது. வெல்வேலாம் மரத்தின் நெற்றுக்கள் கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுகின்றது. இந்த நெற்றின் வாசனையினால் கால்நடைகள் சுவைத்து தின்னும்.

வெள்ளாமை செய்யப்படும் நிலங்களில் இறவையில் 1 அல்லது 2 முறை நீர்ப்பாய்ச்சினால் காட்டு கம்பு, வெள்ளைமுட்டிசி சோளம் வெள்ளாமை செய்வதற்கு போதுமானதாகும். இதனைத் தீவனத்தட்டைக்காக கோடைகாலத்தில் பயன்படுத்தலாம்.

குத்தகைக்கு அல்லது ஒத்திக்கு விடும் முறை

கொரங்காடு நிலச்சொந்தக்காரர்கள் சிலர் கொராங்காடுகளை ஒத்திக்கு அல்லது குத்தகைக்கு விட்டுவிட்டு வேறு பணிகளுக்குக் சென்று விடுவதும் உண்டு. அவர்கள் கால்நடைகளை பராமரிக்க முடியாததால் மற்ற கால்நடை வளர்ப்பவர்களுக்கு நிலத்தை குத்தகைக்கோ அல்லது ஒத்திக்கோ விட்டு விடுவர். குத்தகைக்கு விடுதல் என்பது ஒவ்வொரு வருடமும் அந்த நிலத்திற்கு உரிய தொகையாக காடுகளில் வளரும் புற்களுக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்தி விடுதல் ஆகும். ஒத்திக்கு என்பது ஒரு முழுத்தொகையையும் நிலச் சொந்தக்காரர்களுக்கு கொடுத்து விடுவர். நிலச் சொந்தக்காரர் அந்தக் தொகையைத் திருப்பிக் கொடுக்கும் வரை பணத்தைக் கொடுத்தவர் அந்தக் கொரங்காட்டில் கால்நடைகளை மேய்த்து வருவர்.

குத்தகைக்கு விடும் முறை மூலம் 5 ஏக்கருக்கு நிலச் சொந்தக்காரர்களுக்கு ரூபாய் 15000 வருடத்திற்கு கிடைக்கும். ஒத்திக்கு விடும் முறை மூலம் 5 ஏக்கருக்கு ஒத்திக் தொகையாக ரூபாய் 50000 கொடுக்கப்படுகிறது.

மேய்ச்சல் நிலத்தில் ஆர்வமில்லாததற்கு காரணங்கள்

முன்பு காங்கேயம் மாடுகள் உழவிற்கும், வண்டியிழுவைக்கும் பயன்பாடு இருந்ததால் கொரங்காடு மூலம் காளை பராமரிப்பு செய்து வந்தனர். மாடுகளுக்கும் நல்ல கிராக்கி இருந்து வந்தது. தற்சமயம் இம்மாடுகள் குறைந்த பாலை மட்டும் தருவதால் விவசாயிகள் லாபம் தரும் செம்மறி ஆட்டு வளர்ப்பிற்குச் சென்று விட்டனர். பெரும்பாலான குடும்பங்களில் பிள்ளைகளைப் படிக்க வைத்து ஐ.டி. நிறுவனங்களில் சென்று விட்டமையால் அடுத்த தலைமுறையினர் இதில் அக்கறை காட்டாமல் உள்ளனர். எனவே இந்நிலங்களை உள்ளூர் விவசாயத் தொழிலாளர்கள் பராமரித்து போக்கியம் அல்லது குத்தகைப்பணம் செலுத்தி வருகின்றனர்.

தற்பொழுது கூலி ஆட்கள் சம்பளம் மிகவும் அதிகமாக உள்ளதால் கலப்பின பசுக்கன்று குட்டிகளை பால் மறந்ததும் சந்தையில் விற்கப்படும் கிடாரிகளை வாங்கி வந்து சுமார் 1–2 வருடங்கள் வளர்த்து சினைப்பருவத்தில் விற்று விடுவார்கள். கிடாரி

கன்றுகளை ரூ. 15,000 கொடுத்து வாங்குவர். வளர்ந்த கிடாரிகளை ரூ 70,000 வரை விற்றுவிடுவர். இதில் பராமரிப்புச் செலவு குறைவு. ஓர் ஏக்கருக்கு ஒரு கன்று வீதம் பராமரிப்பர். 5 ஏக்கர் கொரங்காட்டில் 5–6 கன்றுகள் வளர்த்து பின் விற்றுவிடுவர்.

கொரங்காடு மேய்ச்சலை ஊக்குவிக்க

இது நமது பாரம்பரியத்தில் உண்டான உன்னதக்காடு என்று கூறலாம். கொரங்காடு தற்பொழுது அழிந்து கொண்டு வருகின்றது. இதை குறைந்தவிலைக்கு தனியார் கம்பெனிகளுக்கு விவசாயிகள் விற்று விடுகின்றனர். பல்லாயிரக்கணக்கான நிலத்தை தனியார் நிறுவனங்கள் ஒன்றாகச் சேர்த்து, வேலி போட்டு தங்களது பராமரிப்பில் பாதாள மற்றும் ராட்சத ஆழ்குழாய் கிணறுகள் போட்டு நீர்வளத்தை இழக்கச் செய்து வருகின்றனர். காற்றாலை பண்ணையாகவும் மாற்றுகின்றனர். விவசாயிகள் இனிமேலாவது ஒன்று சேர்ந்து நிலத்தை கம்பெனிகளுக்குக் கொடுக்காமலிருக்க வேண்டும். இதற்கு சில திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டும்.

1. நூறு நாட்கள் வேலை வாய்ப்பு திட்டத்தில் கம்பிவேலி போடுதல், ஆட்டு கொட்டகை அமைத்தல், கால்நடைகளுக்கு குடிநீர் வழங்க, பிவிசி குழாய் பதித்தல், இலவச கொழுக்கட்டை புல், நரிப்பயறு, கொள்ளுவிதைகள் வழங்குதல் போன்றவற்றை செய்துதர வேண்டும்.

2. இப்பகுதி முழுவதும் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்து கம்பெனிகளின் காற்றாலை, மின்சாரம் தயாரித்தல் போன்றவற்றை தடை செய்ய வேண்டும்.

3. இராட்சத ஆழ்குழாய் கிணறுகளை தோண்டத் தடை விதித்தல்

4. விவசாயிகளுக்கு கொரங்காடு சீரமைக்க, குத்தகையில் பராமரிக்க, ஆடு வாங்க, கொட்டகை போட, கடன் வசதிகளை சிரமமின்றி கிடைக்க வழிவகை செய்தல்.

கொரங்காடு பரவலாக்க

தமிழ்நாட்டில் எங்கெங்கு செஞ்சரளி, செம்மண் நிலங்கள் தரிசாக உள்ளனவே அங்கெல்லாம் கொரங்காடு முறை விவசாயிகளால் அனுசரிக்கப்பட்டு வந்தால் கால்நடைகளில் பண்டம் பார்க்கலாம். காட்டுக்கம்பு, நரிப்பயறு, கொழுக்கட்டைப்புல் விதைகள் காங்கேயத்தில் கடைகளில் கிடைக்கும்.

மேலும் விவரங்களுக்கு

திரு. நல்லசேனாபதி, நல்லாம்பாளையம், தாராபுரம் தாலுகா, திருப்பூர் மாவட்டம் செல் : 8144109846

திருமதி. சௌந்திரம், காத்தசாமிபாளையம்,

சின்னதாராபுரம், திருப்பூர் மாவட்டம்

(கொரங்காட்டில் காங்கேயம் காளைகளை பராமரித்து விவசாயிகளின் பசுக்களுக்கு இயற்கைமுறையில் இனப்பெருக்கம் செய்து வருகிறார்) செல் : 7010867787

கால்நடை குடிதண்ணீரில் பனம்பழம் கலந்து விடுதல்

எங்கள் கொரங்காட்டு நிலத்தில் பனைமரங்கள் உள்ளன. இதிலிருந்து விழும் பனம்பழத்தை தோல் நீக்கி ஆடு, மாடுகள் குடிக்கும் குடிநீரில் கலந்து விடுவோம். 10 லிட்டர் நீருக்கு ஒரு பழம் என்ற அளவில் கலந்து விடுவோம். இதனால் நல்ல வாசனையுடன் சுவையுடன் இருக்கும். கால்நடைகள் விரும்பி அருந்தும்.

திருமதி. சௌந்திரம், காத்தசாமி பாளையம்,
சின்ன தாராபுரம் வழி, திருப்பூர் மாவட்டம்.
செல் : 7010867787

பெரிய வேலுச்சாமியின் வைத்யம்

சுண்டுவாத மாடுகளுக்கு

மாடு சுண்டி சுண்டி நடந்து வரும் அல்லது எட்டு வைக்கும். பேய்மிரட்டி, கசக்காமுட்டி என்ற பெரிய அளவு காய் எடுத்து சூடு செய்து பிறகு இரண்டாக வெட்டி முழங்கால், குழம்பின் மேற்புரம் தடவி விட வேண்டும். இதன் ஒரு பாகத்தை எடுத்து வாய்வழி உள்ளேயும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தர வேண்டும்.

கண்ணில் வெள்ளை விழுந்தால்

ஒரு செம்பில் நீர் எடுத்து 4 நந்தியாவட்டை பூ அதில் போட்டு ஓர் இரவு வைத்து விட வேண்டும். மறுநாள் காலை இந்த நீரை 2 தடவை கண்ணில் தெளிக்க வேண்டும். சேவல் கொண்டை அறுத்து வரும் இரத்தம் ஒரு குச்சியில் எடுத்து கண்ணிற்க்குள் விட வேண்டும்.

காசநோய், எலும்புருக்கி நோய்க்கு

பனங்கருப்பட்டி ஒரு கிலோ, ஜாதிக்காய் 5 எண்ணம், சுக்கு 50 கிராம், மிளகு 10 கிராம், சீனா கற்கண்டு 200 கிராம், பச்சைக்கற்பூரம் 5 இவை அனைத்தையும் தூள் செய்து கொள்ளவேண்டும். பேரீச்சம்பழம் 1/4 கிலோ, முந்திரிப்பழம் 100 கிராம், நெய் 1/4 படி இவற்றைப் பிசைந்து வைத்துக் கொள்ள வேண்டும். வேப்பங்கொழுந்து 50 கிராம், கருந்துளசிக்கொழுந்து 50 கிராம், இடித்து வைத்து கொள்ள வேண்டும். அனைத்தையும் ஒரு பாத்திரத்தில் சேர்த்து வேப்ப மர விறகால் எரிக்க வேண்டும். கிண்டுவதற்கு வேப்பங்குச்சி வைத்து செய்ய வேண்டும். பின்னர் நெல்லிக்காய் அளவு உருண்டை பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதனை காலை, மாலை 2 வேளை 2 உருண்டை சாப்பிட்டு வர வேண்டும். இதனை 24 நாட்கள் (48 உருண்டைகள்) சாப்பிட்டு வர வேண்டும்.

பெரியவேலுச்சாமி கவுண்டர், எல்லைத்தோட்டம், நல்லாம்பாளையம். தாராபுரம் தாலுகா, திருப்பூர் மாவட்டம், செல் : 94860 55094

கால்நடை மூலிகை வைத்யம்

1. மடிக்காம்பு அடைப்பு

அறிகுறிகள்:

காம்புகளில் காயம் ஏற்பட்டாலும் காம்பு திசுக்கள் வளர்சிதை மாற்றத்திலும் பால் சரியாக இறங்குவதில்லை. சில காம்புகளில் பால் பீச்சுவதை நிறுத்திவிட்டாலும் இந்த பிரச்சனை உண்டாகும்.

தேவைப்படும் பொருட்கள் :

புதிதாகப் பறித்த சுத்தமான வேப்ப இலை காம்பு ஒன்று, மஞ்சள் பொடி, வெண்ணெய் அல்லது நெய் . முதலில் முலைக்காம்பு எந்த அளவுக்கு நீளம் இருக்கிறதோ அதைவிட சற்று அதிகமாக (3 அங்குலம்)வேப்பிலை காம்பின் மேல் பகுதியில் வெட்டவேண்டும். காம்பில் உள்ள இலைகளை நீக்கிவிட வேண்டும். மஞ்சள்தூள், நெய் அல்லது வெண்ணெய் கலந்த கலவையை வேப்பங்காம்பின் மீது நன்றாக பூசவும். பாதிக்கப்பட்ட மடியின் காம்பை கழுவவும். பாதிக்கப்பட்ட மாட்டின் முலைக்காம்பில் கலவை பூசப்பட்ட வேப்பங்காம்பின் நுனியை இடஞ்சுழியாக சுழற்றிய படி உள்ளே சொருகவும். காலையில் நுழைத்த காம்பை மாலையில் அகற்றிவிட்டு வேறு காம்பை சொருகலாம். ஒவ்வொரு முறையும் பாலை கறந்த பின்னர் கலவை பூசப்பட்ட புதிய வேப்பங்காம்பை இதே போல் பயன்படுத்தவும்.

சினைமாட்டின் மடியில் நீர் கோர்த்தல்

அறிகுறிகள்:

காம்புகளில் வீக்கத்தினாலும் பால் உற்பத்தி குறைந்தாலும் பால் கறக்கும் சமயம் அமைதியின்மைனாலும் இப்பிரச்சினை உண்டாகும்.

தேவைப்படும் பொருட்கள் :

நல்லெண்ணெய் (அல்லது) கடுகுஎண்ணெய் 200 மில்லி, மஞ்சள்பொடி ஒரு கையளவு, பூண்டு இரண்டு பல்.

வைத்யம்:

எண்ணெயை சூடு செய்து மஞ்சள்பொடி மற்றும் நறுக்கிய பூண்டை சேர்க்கவும். நன்குகலக்கி வாசனை வரும்போது அடுப்பில் இருந்து இறக்கி ஆறவிடவும். (கொதிக்க வைக்க தேவையில்லை).

மடியின் நீர் கோர்த்த பகுதி மற்றும் மடியின் மேல் வட்டவடிவில் அழுத்தி தடவவும். ஒரு நாளைக்கு நான்கு முறை மூன்று நாட்களுக்கு தடவ வேண்டும்.

குறிப்பு: இந்த கலவையை உபயோகிக்கும் முன் மடி

வீக்க நோய் இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

2. அம்மை/ மருகு/ வெடிப்பு

அறிகுறிகள்:

உடம்பு முழுவதும் கொப்புளங்கள் காணப்படும். காய்ச்சல் இருக்கும். முகம் மற்றும் மடிப்பகுதியில் கொப்புளங்கள் காணப்படும்.

தேவைப்படும் பொருட்கள் :

பூண்டு 5 பல், மஞ்சள் பொடி 10 கிராம், சீரகம் 15 கிராம், திருநீற்றுப்பச்சிலை ஒரு கையளவு, வேப்பிலை ஒரு கையளவு, வெண்ணெய் அல்லது நெய் 50 கிராம்.

தயாரிக்கும் முறை :

சீரகத்தை 15 நிமிடம் தண்ணீரில் ஊற வைக்கவும். அனைத்துப் பொருட்களையும் நன்கு அரைக்கவும். வெண்ணெய் சேர்த்து நன்கு கலக்கவும்.

வைத்யம்:

பாதிக்கப்பட்ட பாகங்களில் பாதிப்பு சரியாகும் வரை முடிந்த வரை பலமுறை தடவவும்.கலவையை தடவுவதற்கு முன் பாதிக்கப்பட்ட தோலை நன்றாக சுத்தம் செய்து உலர வைக்கவும்.

3. மூட்டு வீக்கம்

அறிகுறிகள்:

முழங்கால், மூட்டுப் பகுதியில் மிருதுவாகவும் நீர் கோர்த்து காணப்படும். மாடு எழுந்திருக்க முடியாது.

தேவைப்படும் பொருட்கள் :

சோற்றுக்கற்றாழை 100 கிராம், சுண்ணாம்பு (கால்சியம் ஹைட்ராக்சைடு) 10 கிராம், பிரண்டை தண்டு 100 கிராம், மஞ்சள்தூள் 15 கிராம், பூண்டு 5 பல், நல்லெண்ணெய் ஒரு லிட்டர்.

அனைத்துப் பொருட்களையும் சேர்த்து நன்கு பசையாக அரைத்துக் கொள்ளவும். அரைத்த கலவையுடன் ஒரு லிட்டர் நல்லெண்ணெய் கலந்து கொதிக்க வைத்து ஆற வைக்கவும்.

வைத்யம்:

தயாரித்த கலவையை ஒரு நாளைக்கு 4 முதல் 5 முறை பாதிக்கப்பட்ட பகுதியில் அதிகம் அழுத்தம் கொடுக்காமல் பிரஷ் கொண்டு தடவவும்.

பாதிக்கப்பட்ட பகுதியில் ஒரு நாளைக்கு இரண்டு முறை சுடுநீர் ஒத்தடம் செய்யவும்.

4. மாடுகள் எழுந்திருக்க முடியாது இருத்தல்:

அறிகுறிகள்:

மாடு எழுந்திருக்க முடியாது. படுத்தே இருக்கும். முன்னங்கால்களை அசைத்துக் கொண்டே இருக்கும்.

தேவைப்படும் பொருட்கள் :

நாட்டுக்கோழி முட்டை 2, முருங்கை இலை 4 கையளவு, பிரண்டை 4 கையளவு, வெல்லம் தேவையான அளவு.

வைத்யம்:

வேகவைக்காத முட்டையை எடுக்கவும். முருங்கை இலை மற்றும் பிரண்டையை தனித்தனியாக அரைக்கவும். இத்துடன் வெல்லம் தேவையான அளவு சேர்க்கவும். இரண்டு முட்டையை அதன் ஓட்டுப்பகுதியில் சிறிய துளையிட்டு முழு இரண்டு முட்டையாக ஒரு நாளைக்கு மூன்று முறை கொடுக்கவும். தினமும் இரண்டு மணி நேர இடைவெளியில் அரைத்த முருங்கை மற்றும் பிரண்டை பசையை 4 கையளவு எடுத்து வாய் வழியாக கொடுக்கவும். நான்கு நாட்கள் வரை பாதிக்கப்பட்ட மாடுகளை எழுப்ப முயற்சிக்கக் கூடாது. கற்பூரவள்ளி இலை, துளசி மூங்கில் இலை, நொச்சிஇலை, மாவிலங்கஇலை, எருக்கம் மொட்டு இவை அனைத்தையும் ஒரு கைப்பிடி அளவு எடுத்து அரைத்து அதனுடன் சுக்கு 30 கிராம், மிளகு 30 கிராம், திப்பிலி 30 கிராம், ஓமம் 30 கிராம், கருஞ்சீரகம் 30 கிராம், இலுப்பைப் புண்ணாக்கு கால் கிலோ இவை அனைத்தையும் நன்றாக அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும். ஒரு நாளைக்கு இரண்டு வேளை 10 லிருந்து 15 நாள் கொடுக்க வேண்டும்.

பூச்சிக்கொல்லி நச்சுத்தன்மை/சயனைடு நச்சு/ காளான் நச்சேற்றம்:

அறிகுறிகள்: நீண்ட மூச்சு விடும். கண்கள் விரிந்திருக்கும். வாயில் நுரை தள்ளும்.

தேவைப்படும் பொருட்கள் :

வெற்றிலை 10, மிளகு 10 கிராம், உப்பு 10 கிராம், வெல்லம் தேவையான அளவு.

புளி ஒரு கிலோ, தண்ணீர் ஒரு லிட்டர், முருங்கை இலைச்சாறு ஒரு கிலோ (இலையிலிருந்து).

வைத்யம்:

வெற்றிலை, மிளகு, உப்பு சேர்த்து பசையாக அரைக்கவும். அரைத்த கலவையுடன் தேவையான அளவு வெல்லம் சேர்க்கவும்.

இதர பொருட்கள் தயாரிக்கும் முறை:

புளியை தண்ணீரில் 15 நிமிடம் ஊறவைத்து பின்னர் அதன் சாறை (புளிக்கரைசல்) மட்டும் தனியாக எடுக்கவும். புளிக்கரைசலுடன் முருங்கை இலைச்சாறு

வெல்லம் தண்ணீர் சேர்த்து நன்றாக கலக்கவும்.

வைத்யம்:

தயாரித்த வெற்றிலைக் கலவையை முதலில் கொடுக்கவும். ஒவ்வொரு இரண்டு மணி நேர இடைவெளியில் புளிக்கரைசல், முருங்கை இலைச்சாறு, வெல்லக்கலவையை 200 மில்லி கவனமாக நுரையீரல் பகுதியில் செல்லாதவாறு கொடுக்கவும் .

புளி, முருங்கை, வெல்லம் கலவை கொடுக்கும் இடைவெளியில் வெற்றிலைக் கலவையைக் கொடுக்கவும்.

பாலில் இரத்தம் கலந்து வந்தால்

அறிகுறிகள்: பாலில் ரத்தம் கலந்து வரும். பாலில் கெட்ட வாசனை இருக்கும். தீவனம் எடுக்காது.

வைத்யம்:

கறிவேப்பிலை 2 கையளவு, முருங்கை இலை 2 கையளவு, வெல்லம் 100 கிராம், எலுமிச்சைபழம் 6.

முதல் இரண்டு பொருட்களை வெல்லத்துடன் சேர்த்து பசையாக அரைக்கவும். எலுமிச்சைபழங்களை இரண்டாக நறுக்கவும். அரைத்த கலவையை வாய் வழியாக ஒரு நாளைக்கு இரண்டு முறை நோய் தீரும் வரை கொடுக்கவும். நறுக்கிய இரண்டு எலுமிச்சையை ஒரு நாளைக்கு மூன்று முறை வீதம் மூன்று நாட்களுக்கு கொடுக்கவும் . சோடா உப்பு 100 கிராம் நீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். ஒரு நாளைக்கு மூன்று வேளை என்ற அளவில் கொடுக்க வேண்டும்.

குறிப்பு: இந்த மருத்துவ முறையுடன் சேர்த்து மடிவீக்க நோய்க்கான மூலிகை மருத்துவ முறையையும் பின்பற்ற வேண்டும்.

சிறுநீர் பிரியாதிருத்தல் /சிறுநீரில் ரத்தம் கலந்து வருதல்

அறிகுறிகள்; சிறுநீர் சிறிது சிறிதாக கழிக்கும். சிறுநீர் முழுவதுமாக கழிக்காது. மாடு கூனிக் கொண்டு இருக்கும். பல்லைக்கடிக்கும்.

வைத்யம்:

முருங்கை இலை ஒரு கிலோ அளவு எடுத்து அரைத்துக் கொடுத்தால் சிறுநீர் நன்றாக பிரியும்.

சோற்றுக்கற்றாழை ஒரு மடல், மஞ்சள் 25 கிராம், கீழாநெல்லி 200 கிராம் இவை மூன்றையும் அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும். ரத்தம் கலந்த சிறுநீர் பிரிந்தால் வில்வ இலை 200 கிராம், பழைய புளி 200 கிராம், சின்ன வெங்காயம் 300 கிராம், ஆகிய மூன்றையும் நன்றாக அரைத்து 100 மில்லி நல்லெண்ணெயில் கலந்து இவற்றுடன் ஒரு லிட்டர் நீராகாரத்துடன் நன்கு கலக்கி மாட்டிற்கு உள்ளே தர வேண்டும். நெருஞ்சிச்செடி 100 கிராம், கண்ணுப்பிள்ளை செடி, என்ற கூரைப்பூ 50 கிராம், இரண்டையும் இடித்து இதனுடன் மிளகு 50 கிராம், சேர்த்து அரைத்து நீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

தோல் நோய்

அறிகுறிகள்: ரோமம் உதிர்ந்து இருக்கும். தோலில் பத்து போன்று காணப்படும்.

வைத்யம்:

சீமை அகத்தி இலையை அரைத்து எலுமிச்சம்பழம் இரண்டு எடுத்து சாறு பிழிந்து இரண்டையும் ஒன்றாக கலந்து வெளிப்பூச்சாக பூசி விட வேண்டும். இதனை குணமாகும் வரை செய்து வரவேண்டும். கொல்லம் கோவை கிழங்கு 200 கிராம், சின்ன வெங்காயம் 200 கிராம், சீரகம் 50 கிராம், ஆகியவற்றை இடித்து அரை லிட்டர் நீரில் கலந்து நன்கு கொதிக்க வைத்து உள்ளே புகட்ட வேண்டும். விழுதி இலை ஒரு கைப்பிடி, சின்ன வெங்காயம் 100 கிராம், சீரகம் 15 கிராம், இவைகளை நன்கு அரைத்து மூன்று வேளை உள்ளே தர வேண்டும்.

சுளுக்கு

அறிகுறிகள்: விபத்தினாலும் கால் இடறி விழுவதாலும் சுளுக்கு உண்டாகும். மாடு நன்றாக நடக்காது.

வைத்யம்:

மாடுகளுக்கு கழுத்து, முதுகு கால்களில் சுளுக்கு ஏற்பட்டால் தவிடை வறுத்து சூட்டுடன் ஒத்தடம் கொடுக்க வேண்டும். நாவல் மரப்பட்டையை சுமார் 100 கிராம் அளவு எடுத்து அரைத்து பத்து போட வேண்டும். வீக்கத்துடன் கூடிய சுளுக்கு இருந்தால் மருதாணி இலையை 100 கிராம் அளவு எடுத்து நன்றாக அரைத்துப் பூசினால் வீக்கம் குறைந்து சுளுக்கு குணமாகும். இதனை வீக்கம் குறையும் வரை செய்யவும்.

வெறி நாய்க்கடி

அறிகுறிகள்:

வெறி நாய்க்கடியின் குணத்தால் ஈயை, காக்கையை துரத்தும், கன்றைக்கடிக்கும். கண்ணாடி காண்பித்தால் பாயவரும். கல்லைக்கடிக்கும் வாயில் உமிழ்நீர் ஒழுகிக்கொண்டிருக்கும்.

வைத்திய முறைகள் :

உரிக்கட்டிவேர் என்ற ஈஸ்வர மூலிகைவேர் 5 கிராம், அழிஞ்சில் மரப்பட்டை 5 கிராம், பீமரப்பட்டை 5 கிராம், மூன்றையும் சேர்த்து அரைத்து ஆட்டுப்பாலில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். மிளகுதக்காளி, எனப்படும் மணத்தக்காளி இலைகளை கைப்பிடி அளவு எடுத்து வேப்பெண்ணெயில் வதக்கி கடிவாயில் வைத்து கட்ட வேண்டும். இத்துடன் பேய்மிரட்டி இலையை 200 கிராம் அளவு இடித்து சுடு தண்ணீரில் கலந்து ஏழு நாட்கள் உள்ளே கொடுக்க வேண்டும். நாயுருவி இலைச்சாறை சுண்ணாம்புடன் கலந்து நாய் கடித்த இடத்தில் பூசி வரவேண்டும்.

நாயுருவி இலையை 100 கிராம் அரைத்து 200 மில்லி லிட்டர் வெள்ளாட்டு பாலில் கலந்து தினமும் மாலை ஒரு வேளை வீதம் ஏழு நாட்கள் கொடுத்து வர வேண்டும்.

தவளை நோய்

அறிகுறிகள் :

தவளையைப் போல்தத்தி தடுமாறி நடக்கும். படுத்தால் எழுந்து நிற்க முடியாது, தொப்புள், மார்பு, இவ்விடங்களில் கட்டி போல் வீங்கி இருக்கும்.

வைத்யம்:

முடநாரி என்ற வாதமடக்கி இலை ஒரு கிலோ, சிறு வெங்காயம் கால் கிலோ, சீரகம் 100 கிராம் ஆகியவற்றை அரைத்து ஒரு படி நீரில் கலந்து ஒரு நாளைக்கு இரண்டு வேளை வீதம் குணமாகும் வரை கொடுக்க வேண்டும். கால் மூட்டுப்பகுதியில் சுடு சாம்பல் அல்லது சுடு மணல் கொண்டு ஒத்தடம் தர வேண்டும் . இந்த நோய் வரும் முன்னர் சுண்ணாம்புக் கல் தெளிந்த நீர் கொடுத்து வந்தால் தேவையான சுண்ணாம்புச் சத்து கிடைத்து விடும். இதனால் இந்த நோய் வருவதை தவிர்க்கலாம். ஒரு சுத்தமான மண் சட்டியில் ஒரு கிலோ சுண்ணாம்புக்கல் (கால்சியம் ஹைட்ராக்சைடு) எடுத்துக்கொண்டு அதில் நீர் 10 லிட்டர் அளவு சேர்த்து கரைக்கவும். இந்தக் கலவை நீரை ஓர் இரவு முழுவதும் அப்படியே வைக்கவும். மறுநாள் காலை இந்த மண் பாத்திரத்திலிருந்து 200 மி.லி லிட்டர் அளவு தெளிந்த சுண்ணாம்பு நீரை எடுத்து குடிநீர் தொட்டியில் சேர்த்து குடிக்க விட வேண்டும் . இதனை தினமும் கடைப்பிடித்து வரவேண்டும். தினமும் நீர் 200 மி.லி லிட்டர் கலவையில் சேர்த்து கொள்ள வேண்டும். கற்பூரவள்ளிஇலை, சங்க குப்பி இலை, ஒவ்வொன்றும் 200 கிராம், எடுத்து சாறு எடுக்க வேண்டும். மஞ்சள், கல்உப்பு, மிளகு, ஓமம், ஒவ்வொன்றும் 10 கிராம் எடுத்து அரைத்து மேற்படி சாற்றில் கலந்து ஒரு நாளைக்கு இரு வேளை கொடுக்க வேண்டும். இதனை ஒரு வாரம் செய்து வர வேண்டும்.

குதிரை வலிப்பு நோய்

அறிகுறிகள்:

நான்கு கால்களும் சுண்டி இழுக்கும், மார்பில் வலி இருக்கும், கண் சுருங்கி இருக்கும்.

வைத்திய முறைகள்:

வேலிப்பருத்தி இலையை 200 கிராம் அளவு எடுத்து, அரைத்து வேப்பெண்ணெய் 200 கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். வேப்பெண்ணெய் ஒரு லிட்டர் அளவு எடுத்து நன்கு சூடாக்கி பின்னர் வேலிப்பருத்தி இலையை துணியில் கட்டிக்கொண்டு சூடான எண்ணெயில் துணி மூட்டையை நனைத்து எடுத்து கால்நடைகளுக்கு ஒத்தடம் தர வேண்டும்.

அரணைக்கடி

அறிகுறிகள்: வால் தடித்து காணப்படும். ரோமங்கள் இருக்காது. வாலை தானே கடித்துக் கொள்ளும். கால்களால் கண்களை தேய்க்கும். அதிகம் பாதிக்கப்பட்டால் வால் அறுந்து விழுந்து விடும்.

வைத்யம்:

வெளி மருந்து:

ஆடுதின்னாப்பாலை, கசக்க முட்டி இரண்டையும் 250 மி.லி சாறு எடுத்து வேப்பெண்ணெய் 250 மி.லி இரண்டையும் காய்ச்சி பாதிக்கப்பட்ட இடத்தில் போடவும். (சம அளவு) வரிக்குமட்டிகாய் 2 எடுத்து வெட்டி உள் சதையை பாதிக்கப்பட்ட இடத்தில் தடவவும்.ஆடு தின்னாப்பாலையை 50 கிராம், அரைத்து நெய் 50 கிராம், கலந்து பாதிக்கப்பட்ட இடத்தில் போடவும்.

உள் மருந்து:

சிறியாநங்கை 10 கிராம், ஆடாதொடை 10 கிராம், சுக்கு, மிளகு, திப்பிலி 30 கிராம், சேர்த்து கசாயம்

செய்து 1/2 லிட்டர் அளவிற்கு இரண்டு வேளை கொடுக்கவும். (3 முதல் 5 நாட்கள் வரை). பஞ்சாக தீபாங்கணை சூரம் 30 கிராம் இரண்டு வேளை ஐந்து நாட்கள் வரை கொடுக்கவும்.

அடிப்பட்ட வீக்கம், ரத்தக்கட்டு

அறிகுறிகள்:

மேய்ச்சலுக்கு செல்லும் பொழுது கீழே விழுதல், மாட்டுடன் முட்டிக் கொள்ளுதல், பள்ளத்தில் விழுதல் போன்ற காரணங்களினால் இந்த பிரச்சனை ஏற்படும். அடிபட்ட இடத்தில் வீக்கம் இருக்கும். கட்டி கெட்டியாக கனமாக இருக்கும். கட்டிகள் நிறம் மாறும்.

வைத்யம்:

தவிடை 1/4 கிலோ எடுத்து வறுத்து பொட்டலம் கட்டி ஒத்தடம் கொடுக்க வேண்டும். முடக்கத்தான் 100 கிராம், பிரண்டை 100 கிராம், பூண்டு 10 கிராம், சேர்த்து அரைத்து ஒரு நாளைக்கு இரண்டு வேளை மூன்று அல்லது ஐந்து நாட்கள் வரை பத்து போட வேண்டும்.

உள்மருந்து:

வெற்றிலை 5, ஆடாதொடை 50 கிராம், துளசி 50 கிராம், சீரகம் 15 கிராம், சேர்த்து ஒரு லிட்டர் தண்ணீரில் காய்ச்சி பாதியாக வற்ற வைத்து கசாயம் 250 மி.லி ஒரு நாளைக்கு இரண்டு வேளை 3 முதல் 5 நாட்கள் வரை கொடுக்கவும்.

குறிப்பு : ஒரு வாரம் தண்ணீர் படக்கூடாது.

சொக்கிக்கொள்ளுதல்:

அறிகுறிகள்;

இரை எடுக்காது. வயிறு ஊதி இருக்கும். சோர்வாக இருக்கும்.

வைத்யம்:

புளி 200 கிராம், சர்க்கரை 200 கிராம், ஒரு லிட்டர் தண்ணீரில் சேர்த்து கலந்து உள்ளே கொடுக்கவும்.

துத்தி இலை 100 கிராம், அரைத்து திரிகடுகு சூரணம் 30 கிராம், உப்பு 20 கிராம், கலந்து தண்ணீர் 250 மி.லி. யில் ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவை 2 வேளை கொடுக்கவும்.

இளம் கன்று கழிச்சல்

அறிகுறிகள்;

இடைவிடாது கழிச்சல் ஏற்படும். சாணம் பால் போல் இருக்கும். சாணம் துர்நாற்றம் அடிக்கும்.

வைத்யம் :

ஆவாரம்கொழுந்து 10 கிராம், மாமரக்கொழுந்து இலை 10 கிராம், மாதுளை கொழுந்துஇலை 10 கிராம், மஞ்சள் தூள் 5 கிராம், கலந்து அரைத்து சர்க்கரை 5 கிராம் சேர்த்து இரண்டு வேளை கொடுக்கவும். கடுக்காய் தூள் 10 கிராம், சர்க்கரை 5 கிராம், உப்பு 2 கிராம் கலந்து 2 வேளை கொடுக்கவும். திரிபலா சூரணம் 15 கிராம், ஆவாரம் பூ தூள் 5 கிராம் சேர்த்து இரண்டு வேளை கொடுக்கலாம். தென்னங்குரும்பை 3, மஞ்சள்தூள் 5 கிராம் சேர்த்து அரைத்துக் கொடுக்கவும்.

காது நோய்க்கு

அறிகுறிகள்: காதுகளில் அடிப்பக்கம் வீக்கம் இருக்கும். காதில் சீழ் வடியும். காதுகளில் கட்டி இருக்கும். வேலாமரம், புளியமரம் அருகில் கட்டுதலால் வெக்கை உண்டாக்கி காதுகளில் கட்டி வரும்.

மருத்துவம்: மருள் 2 மடல் எடுத்து விளக்கெண்ணெய் தடவி நெருப்பில் வாட்டி பிழிந்து காதில் ஊற்றவும்.

விளக்கெண்ணெய் 200 மி.லி, மஞ்சள்தூள் 5 கிராம் சேர்த்து கலந்து காய்ச்சி காதில் ஊற்றவும்.

வேப்பஎண்ணெய் 100 மி.லி, வசம்பு 10 கிராம் சின்ன வெங்காயம் 10 கிராம் சேர்த்து காய்ச்சி ஆற வைத்து ஐந்து சொட்டு காலை மாலை ஊற்ற வேண்டும்.

தும்பைஇலை 50 மி.லி, தேங்காய்எண்ணெய் 100 மி.லி சேர்த்து மஞ்சள் தூள் 5 கிராம், வெள்ளைப் பூண்டு 4 பல் போட்டு காய்ச்சி ஆற வைத்து காலை, மாலை ஊற்றவும். தேங்காய்எண்ணெய் 100 மி.லி, தும்பை இலைச்சாறு 50 மி.லி, மஞ்சள்தூள் 5 கிராம், வெள்ளைப்பூண்டு 4 போட்டு காய்ச்சி ஆற வைத்து ஐந்து சொட்டு காலை, மாலை ஊற்ற வேண்டும்.

கொம்பு முறிவு

அறிகுறிகள்:

விபத்துக்கள் ஏற்படுதல், மாடுகள் முட்டிக் கொள்வதால், கொம்பு முறிதல், மண்டைக்கரைப்பான் போன்ற காரணங்களால் ஏற்படுதல்.

வைத்யம்:

கூரைப்புகை (ஓட்டடை) சீனி சேர்த்து கொம்பு ஒடிந்த இடத்தில் தடவவும். வெட்டுக்காயப்பூண்டு, மஞ்சள் தூள் தேவையான அளவு சேர்த்து அரைத்து தேங்காய் எண்ணெயில் கலந்து பத்து போடவும். ஆலம்பால் அல்லது திருகுகள்ளிப்பாலில் காட்டன் துணி நனைத்து அந்த இடத்தில் சுற்றி விடவும். மத்தான் தைலம் கொம்பு ஒடிந்த இடத்தில் தடவவும். .குறிப்பு: ஒரு வாரம் மழையில், தண்ணீரில் நனைய விடக்கூடாது.

மாடு கணைத்தல் அல்லது செறுமல்

அறிகுறிகள்: மாடு செறுமிக்கொண்டும் கணைத்துக் கொண்டும் இருக்கும். தொண்டை வீக்கமாக இருக்கும்.

வைத்யம்: ஆடாதொடை 10 கிராம், துளசி 10 கிராம், இஞ்சி 10 கிராம், சேர்த்து காய்ச்சி ஆற வைத்து கசாயம் செய்து சர்க்கரை 20 கிராம், கலந்து இரண்டு வேளை 3 முதல் 5 நாள் வரை கொடுக்கவும். திரிகடுகு சூரணம் 30 கிராம், சர்க்கரை 10 கிராம், சேர்த்து கலந்து ஒரு நாளைக்கு ஒரு வேளை மூன்று நாட்கள் கொடுக்கவும்.

படுத்த மாடு எழுந்திருக்காமல் இருந்தால் அல்லது சினை மாடு திடீரென விழுதல்.

அறிகுறிகள்: தலையை தொங்க விட்டிருக்கும். மாடு சோர்வாக, கால் நடுங்கி இருக்கும். கால் நிலையாக நிற்காது, கால் மடங்கிவிடும். முன்னங்கால் பகுதி முதலில் பாதிக்கும். அசை போடாது. கண் சொறுக சொறுக முழிக்கும். மண்ணைத்தின்னும்.

வைத்யம்: கல் உப்பு ஒரு கைப்பிடி வாயில் போட்டு சரி செய்யலாம். நாட்டு முட்டைகள் மூன்று ஒரு வேளை இரண்டு நாட்களுக்கு கொடுக்கலாம். கறிவேப்பிலை ஒரு கைப்பிடி, பிரண்டை ஒரு கைப்பிடி, முருங்கைக்கீரை ஒரு கைப்பிடி, அகத்திக்கீரை ஒரு கைப்பிடி, தழுதாழை ஒரு கைப்பிடி, தென்னம்பாளை 200 கிராம் சேர்த்து அரைத்து தேங்காய் பால் ஒரு லிட்டர் சேர்த்து கலந்து உள்ளே கொடுக்கவும்.

தொகுப்பு : நம் வழி வேளாண்மை இதழ்களிலிருந்து விரிவாக்கம் செய்யப்பட்டது.

இயற்கை உளுந்து சாகுபடி

நான் பல வருடங்களாக இயற்கையாக உளுந்து சாகுபடி செய்து வருகிறேன். புரட்டாசி ஐப்பசியில் விதைக்கிறேன். இதற்கு எந்த இரசாயன உரமோ, மருந்தோ பயன்படுத்துவது இல்லை. நான் நிலத்தில் பல தானியப்பயிர் விதைத்து முளைத்த 45 நாட்களில் மடக்கி உழுது விடுவேன். இதற்கு செலவு ரூ. 2000 ம் தான் வரும். நமது வீட்டில் மிஞ்சும் பலதானிய விதைகளையே பெரும்பாலும் பயன்படுத்துவேன். இதனால் ஏக்கருக்கு 5 மூடை விளைச்சல் கிடைக்கும் பலதானியப்பயிர் விதைப்பதால் நிலத்திற்கு வளம் கூடும். பூச்சி, நோய் வராமலிருக்க 5 கிலோ வேப்பங்கொட்டையை ரோட்டில் போட்டு வாகனங்கள் ஓடும் சமயம் தூளாகிவிடும். இந்த 5 கிலோ தூளுடன் 100 மி.லி. மண்ணெண்ணெய் சேர்த்து ஓர் இரவு ஊற வைத்து மறுநாள் நிலத்தில் விதைத்த 20–30 நாளில் தூவிவிடவேண்டும்.

பலதானிய பயிர் உரச்செடியாக விதைக்கும் முறை:

கொள்ளு, உளுந்து, காராமணி, நெல், கம்பு. சோயாபீன்ஸ், புளியங்கொட்டை, வேப்பங்கொட்டை, பப்பாளி, கொத்தமல்லி, வெந்தயம், கடுகு, சீரகம், தக்கைப்பூண்டு (ஒவ்வொன்றும் 5 கிலோ). இந்த விதைகளை ஒரு ஏக்கருக்கு 27 கிலோ விதைக்க வேண்டும். சிறிய விதைகளை தனியாகவும், பெரிய விதைகளை தனித்தனியாகவும் விதைக்கலாம். விதைத்த பின் 45 நாட்கள் கழித்து உழுது மண்ணோடு சேர்த்து விட வேண்டும். இதனால் உரச்செலவு குறைகிறது என்று கூறுகிறார். ஒரு ஏக்கருக்கு (ரூ. 2500 செலவாகிறது (விதை செலவு ரூ. 1500 + டிராக்டர் வைத்து உழுவது ரூ. 1000). இதனால் இரசாயன உரம் வாங்கும் (யூரியா, டிஏபி) செலவு இல்லை. அதாவது ரூ. 5000 வரை மிச்சமாகும்.

மரச்செக்கில் எண்ணெய் ஆட்டும் முறை

எள் விதைகளை 3 முறை நீரில் கழுவ வேண்டும். 3 முறை கழுவி வெயிலில் காய வைக்க வேண்டும். பிறகு 10 கிலோ எள்ளுக்கு 1 கிலோ பனங்கருப்பட்டி சேர்த்து ஆட்ட வேண்டும். பின்னர் ஒரு எலுமிச்சம்பழம், ஒரு இளநீர் சேர்த்து விட வேண்டும். எண்ணெய் ஆட்டியவுடன் நாட்டு வெல்லம் ஒரு கட்டி எண்ணெயில் விட வேண்டும். ஆட்டிய பின் எண்ணெய்யை 4 நாட்கள் வெயிலில் வைத்து அதிலுள்ள ஈரத்தை போக்க வேண்டும். இவரிடமிருந்து 1 லிட்டர் ரு 275 என்று வாங்கி செல்கின்றனர்.

உளுந்த வடைக்கு தோல் நீக்காத பருப்பை ஐஸ் நீர் விட்டு கிரைண்டரில் ஆட்டுவதால் மாவு அதிகமாக பொங்கும். வடை மிருதுவாக இருக்கும்.

நான் தற்சமயம் அடிக்கடி சென்னைக்கு என் மகன் வீட்டிற்கு செல்லவேண்டியுள்ளதால் என்னுடைய நிலத்தை குத்தகைக்கு விட்டு விட்டேன். இருப்பினும் இயற்கை முறை உளுந்து சாகுபடியை விவசாயிகள் பின்பற்றி பலன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

டி. மேகநாதன், த/பெ. தங்கவேல் உடையார்
பெருமாள் கோவில் தெரு, மதுராம்பட்டு, தண்டரை வழி திருவண்ணாமலை மாவட்டம் –606804
செல் – 9626951552

குறிப்பு : இவரை பற்றிய பலதானிய உரச்செடி விதைப்புமுறை நம்வழிவேளாண்மை ஏப்ரல் – ஜூன் 2018 இதழில் பிரசுரமாகியுள்ளது.

ரஞ்சித்தின் கால்நடை மூலிகை வைத்யம்



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தாலுகா,அதியன்குப்பம் கிராமத்தில் வசித்து வரும் திரு. ரஞ்சித் (வயது 31). இவர் தனியார் பசு பண்ணையில் 5 வருடங்கள் வேலை பார்த்து வந்தார். சேவா மூலம் கால்நடை மூலிகை வைத்யப் பயிற்சி எடுத்துக் கொண்டு கிராமங்களில் கால்நடைகளுக்கு வைத்யம் செய்து வருகிறார். இவருடைய கால்நடை மூலிகை வைத்ய அனுபவங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கருப்பை நோய்க்கு

அறிகுறிகள்: கருப்பையிலிருந்து இரத்தம் மற்றும் கோழை வடியும். வால் தூக்கி நிற்கும்.

இதற்கு இலந்தை இலை 100 கிராம், மிளகு 10 கிராம், பூண்டு 50 கிராம் இவை மூன்றையும் ஒன்றாக அரைத்து உள்ளே கொடுக்கவும். 3 நாட்கள் கொடுத்து வர வேண்டும்.

அளவுக்கு அதிகமாக மருந்தை கொடுத்தால்

இதனால் ஏற்படும் இறப்பை தவிர்க்க வெல்லம் 500 கிராம், புளி 250 கிராம், தண்ணீர் 5 லிட்டர் அனைத்தும் நீரில் கலந்து உள்ளே கொடுக்கவும். இத்துடன் 2 நாட்டு வாழைப்பழம் கொடுக்க வேண்டும்.

வலிப்பு நோய்க்கு

அறிகுறிகள் : மாடு படுத்த நிலையில் கால்களை உதறும்.

தேவையான பொருட்கள்: வண்ணான் அவுரி இலை 50 கிராம், வசம்பு 10 கிராம், சிறிய வெங்காயம் 50 கிராம்,வேப்பஎண்ணெய் 50 கிராம். அவுரி இலை, வசம்பு, வெங்காயம் இம்மூன்றும் ஒன்றாக அரைத்து சாறு எடுத்து காதுகளிலும், கண்களிலும் சொட்டு விட வேண்டும். மிளகை அரைத்து வேப்ப எண்ணெயில் கலந்து காதிலும் மூக்கிலும் 5 சொட்டு விடலாம்.

பால் அதிகம் கறக்க

சுரைக்காய் 2 கிலோ எடுத்து நறுக்கி அரைத்து இத்துடன் வெல்லம் 500 கிராம் சேர்த்து உள்ளே தர வேண்டும். 5 நாட்கள் கொடுக்க வேண்டும்.

பாலில் இரத்தம் கலந்து வந்தால்

கால்சியம் சத்து பற்றாக்குறையினால் இது ஏற்படுகிறது. ஒரு எலுமிச்சை பழத்தை நன்றாக அறுத்து உள்ளே கொடுக்கவும். சுண்ணாம்பு 50 கிராம், தண்ணீர் 200 மி.லி. சுண்ணாம்பு நீரில் கலந்து உள்ளே கொடுக்கவும். சுண்ணாம்பு நீரை தீவனத்தில் தெளித்தும் தரலாம். ஒரு நாளைக்கு மூன்று வேளை ஒரு நாள் மட்டும்.

கறிவேப்பிலை 2 கைப்பிடி ஒரு நாளைக்கு 2 வேளை 5 நாட்களுக்கு கொடுக்க வேண்டும்.

முட்டி வீக்கத்திற்கு

சப்பாத்திக்கள்ளி முள் நீக்கி தீயில் வாட்டி துணி வைத்து வீக்கத்தின் மேல் கட்டவும். தவுடை சூடு செய்து துணியில் கட்டி ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

நாய்க்கடிக்கு

ஊமத்தை இலை 1, வெல்லம் 50 கிராம் கலந்து உள்ளே கொடுக்கவும்.

தோல்நோய்க்கு

அறிகுறிகள்: முடி கொட்டி சொட்டையாக இருக்கும்.

இதற்கு ஊமத்தை இலை 250 கிராம், சுண்ணாம்பு 50 கிராம், வேப்பஎண்ணெய் 500 மி.லி. எடுத்துக்கொள்ள வேண்டும். ஊமத்தை இலையை அரைத்து எண்ணெயில் காய்ச்சி சுண்ணாம்புத்தூள் கலக்கவும். இதை உடலில் தடவவும். 5 நாட்கள் கடைபிடிக்க வேண்டும். உள்மருந்தாக மூலிகை குடற்புழு கரைசல் தயார் செய்து தரவேண்டும்.

தயார் செய்யும் முறை :

தேவையான மூலிகைப்பொருட்கள்

நொச்சி இலை 1 கிலோ, சோற்றுக்கற்றாழை மடல்கள் 1 கிலோ, வேப்பங்கொட்டைவிதை 1 கிலோ, சங்கங்குப்பி இலை 1 கிலோ, எருக்கு இலை 1 கிலோ மேலே கூறிய அனைத்து மூலிகைகளையும் தண்ணீர் சிறிது தெளித்து தனித்தனியே அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் இவைகளை ஒன்று சேர்த்த மூலிகைக் கலவையை நன்கு வடிகட்டி ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த கரைசலை ஒரு செம்மறி ஆடு அல்லது வெள்ளாட்டிற்கு ஒரு முறை குடற்புழுக்கள் நீக்கம் செய்ய 20 மி.லி அளவு வாய் மூலம் புரையேராதபடி கொடுக்கவும். 3 மாதம், ஒரு வயதுக்கும் குறைவான செம்மறி அல்லது வெள்ளாட்டுக் குட்டிகளுக்கு 10 மி.லி மட்டுமே வாய் மூலம் வழங்க வேண்டும். வளர்ந்த மாடுகளுக்கு 50 மி.லி வாய் மூலம் வழங்கலாம். மேற் கூறிய முறையில் தயாரிக்கப்பட்ட குடற்புழு நீக்க திரவ

மருந்தை ஒரு மாதம் வரை சேமித்து வைத்து பயன் படுத்தலாம். இந்த குடற்புழு நீக்க மருந்து வழங்கப்படும் போது சாணம் திரவமாக போடுவது மாறி கட்டியாக சாணம் வெளியேறும்; துர்நாற்றமும் மாறி நல்ல முறையில் சாணம் வெளியேறும்.

மேலும் ஆடு மாடுகள் நன்றாக மேய்ச்சல் எடுக்கும் திறன் அதிகரிக்க உதவும். மேய்ச்சல் அதிகமாக எடுப்பதாலும், சாணம் கெட்டியாக மாறுவதாலும் ஆடு மாடுகள் மீண்டும் சுறுசுறுப்பான ஆரோக்கியமான நிலைக்கு திரும்பும்.

கன்று ரத்த கழிச்சலுக்கு

பால் பெருங்காயம் 5 கிராம், தண்ணீர் 50 மி.லி. பால் பெருங்காயத்தை தூள் செய்து நீரில் கலந்து உள்ளே 5 நாட்கள் கொடுக்கவும். சாதாரண குடற்புழு கழிச்சலுக்கு மேற்கூறிய மூலிகை குடற்புழு கரைசல் தயார் செய்து தரவேண்டும்

கோழி, ஆடு, மாடுகளில் வரும் மருக்களுக்கு

பூண்டு, மஞ்சள், திருநீற்றுப்பச்சிலை, குப்பைமேனி, வேப்பங்கொழுந்து, அனைத்தையும் அரைத்து வெண்ணெயில் கலந்து பூசவும். இதனை 5 நாட்கள் தொடர்ந்து பூச வேண்டும்.

தினமும் பருவத்திற்கு வரும் பசு மாட்டிற்கு

மாடு சினைக்கு போட்ட உடன் பிறப்பு உறுப்பு அறையில் பனிக்கட்டியை உள்ளே தள்ளவும். சினைக்கு போடுவதற்கு முன் வேப்பஎண்ணெய் 100 மி.லி, 2 முட்டை கரு கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

ரஞ்சித், அதியன் குப்பம், வந்தவாசி தாலுகா,
திருவண்ணாமலை மாவட்டம்,
செல் : 9345398238

இயற்கை நெல் சாகுபடி

நான் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக இயற்கை வேளாண்மை செய்து வருகிறேன். சீரகச்சம்பா என்ற பாரம்பரிய நெல் ரகத்தை பயிர் செய்து வருகிறேன். இதற்கு ஓர் ஏக்கர் நிலத்தில் சுமார் 22 கிலோ தக்கைப்பூண்டு விதைத்து 45வது நாளில் அதாவது பூக்கும் தருவாயில் மடக்கி உழுது விடுவேன். பின் நீர்பாய்ச்சி வயலை சமப்படுத்தி நெல் வரிசை நடவு செய்கிறேன். இது தவிர எந்த உரமும் நிலத்திற்கு இடுவதில்லை. பக்கத்து தோட்ட விவசாயிகள் நெல்லிற்கு இரசாயன உரம் கொடுத்து பின் பூச்சி மருந்து தெளிப்பார்கள். ஆனால் எனது தோட்டத்தில் எதுவுமே உரமோ, மருந்தோ அடிப்பதில்லை. எங்கள் வயலில் பல தட்டான்கள் பறக்கும். எந்த பூச்சி, நோயும் காணப்படுவது இல்லை. களையெடுக்க மட்டும் செலவு. ஆரம்பத்தில் நட்ட பின் நெல் வயலில் 10 நாட்கள் நீர் தேக்கி களைகளை அழுகவைப்போம். என்னுடைய வயலில் உரம்போட்டால் நெல் சாய்ந்துவிடும். பசுந்தாள் உரம் ஒன்று மட்டும் போதுமானது.

அந்தோணிசாமி, சிந்தாமணி, புளியங்குடி,
தென்காசி மாவட்டம். செல் : 9443582076

இயற்கை முறை பால் உற்பத்தி

நாங்கள் 2017ல் ''பார்ம் கடலூர்'' என்ற பெயரில் பண்ணையைத் துவக்கினோம். சென்னைக்கு அருகேயுள்ள கல்பாக்கம் கடலூரில் பண்ணையுள்ளது. தற்சமயம் 250 நாட்டு பசுக்கள் குறிப்பாக கிர், சாஹிவால் போன்றன உள்ளன. கிர் மாடுகள் நல்ல பால் கொடுத்தாலும் கர்ப்பபை அடிதள்ளுதல் பிரச்சனை உண்டு. சாஹிவாலுக்கு இந்த பிரச்சனை இல்லை. நித்தமும் 280 லிட்டர் பால் எங்கள் பண்ணையிலிருந்து தருவித்து சென்னையில் விநியோகம் செய்கிறோம். ஒரு நாளைக்கு 300 லிட்டர் பால் விநியோகிக்கிறோம். ஒரு லிட்டர் பால் ரூ. 100க்குத் தருகிறோம். பசுமாட்டிற்கு இயற்கையாக விளைந்த பசுந்தீவனம், சூப்பர் நேப்பியர் புல் எங்கள் பண்ணையிலே சாகுபடி செய்து தீவனமாகத் தருகிறோம். பசுந்தீவன பயிர்களை இயற்கை முறையில் ரசாயன உரமில்லாமல் சாகுபடி செய்கிறோம். இதனால் எங்கள் பண்ணைப் பால் இயற்கையாகவும், தரமாகவும் உள்ளது. நெய் கிலோ ரூ. 2000/–க்குத் தருகிறோம். ஒரு கிலோ நெய் எடுக்க 25–30 லிட்டர் பால் தேவைப்படும். பண்ணையை பராமரிக்கும் முறையில் சிரமங்கள் உள்ளன. ஏனெனில் நல்ல கூலியாட்கள் கிடைப்பதில்லை. முன்பு சேவா பயிற்சியின் மூலம் கால்நடை மூலிகை வைத்ய முறைகளை குறிப்பாக மூலிகை மசால் உருண்டை தயார் செய்தலை செய்து வந்தோம். தற்சமயம் மடிநோய்க்கு மட்டும் சோற்றுக்கற்றாழை, மஞ்சள், சுண்ணாம்பு சேர்த்து தடவி குணப்படுத்துகிறோம்.

வயதான பசுமாடுகளை விற்று விடாமல் பாதுகாத்து வருகிறோம். ஒரு வருடமான கிடா கன்றுகளை இதை வளர்ப்பவரை பார்த்து விநியோகிக்கிறோம்.

கே. சாந்தாலட்சுமி, ஹெச். 5/4, பாரி தெரு
கலாசேத்திர காலனி, பெசந்த் நகர்,
சென்னை – 600 090 செல் : 9380664394

கிளித்தீவனம்

சிறு கொண்டை வண்ணக் கிளிகளுக்கு மென்மையான மற்றும் உலர்தீவனம் என இரு வகை

தீவனங்களை கொடுக்கலாம். மென்மையான தீவனமாகக் கோதுமை, பாசிப்பயிறு, வெள்ளை மற்றும் கருப்பு கொண்டைக்கடலை போன்றவற்றை தண்ணீரில் ஊற வைத்து வெயில் காலங்களில் கொடுக்கலாம். உலர்த் தீவனமாகத் தினை, வரகு, சாமை, குதிரைவாலி மற்றும் சூரியகாந்தி விதை ஆகியவற்றை குளிர் காலங்களில் கொடுக்கலாம்.

க.காயத்ரி சீனிவாசன்

சுகுணா கோழியின் மேலாண்மைக் கல்லூரி

உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம்

நன்றி: கால்நடை வேளாண்மை, அக்டோபர் 2024

உம்பளாச்சேரி மாடு இனப்பெருக்கம்

என்னிடம் 100 உம்பளாச்சேரி மாடுகள் உள்ளன. இந்த மாடுகளை 3–4 இடங்களில் பராமரிக்கப்படுகின்றன. எங்கள் ஊருக்கு அருகில் உள்ள அலையாத்திக் காடுகளில் இம்மாடுகள் தானாக மேய்ந்து மாலையில் வீடு திரும்பிவிடும். இந்த மாடுகளை சில குடும்பங்கள் பராமரித்து வருகின்றனர். மாடுகளின் சாணத்தை வயலுக்கு உரம் போடுவதற்கு அவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர். ஆண் கன்றுகளை விற்கும் சமயம் 5ல் ஒரு பங்கு பணம் அவர்களுக்கு கொடுத்துவிடுவோம். ஆண் கன்றுகளை ஜல்லிக்கட்டு, வண்டி மாட்டிற்கு (கரும்பு தட்டை லோடு ஏற்றிக்கொண்டு செல்ல) பயன்படுத்துகின்றனர்.

என்னுடை 50 ஏக்கர் நிலத்தில் எந்தவித மருந்தும், களைக்கொல்லியும் பயன்படுத்துவதில்லை. என்னுடைய தம்பி இன்ஜினியருக்குப் படித்துவிட்டு இயற்கை விவசாயத்திற்குத் துணையாக இருந்தார். இவர் பஞ்சகவ்யா, ஜீவாம்ருதம் தயார் செய்து பயிருக்குக் கொடுப்பார். இதனால் உரங்கள் போடுவதில்லை. இவர் காலமான பின் நாங்கள் யூரியா மட்டும் கால் பகுதி குறைந்த அளவே பயன்படுத்துகிறோம். பட்டுப்புழு வளர்க்க பட்டுச்செடிக்கு பஞ்சகவ்யா தெளிக்கும் சமயம் இதன் இலைகள் நல்ல வளர்ச்சியுடன் பளபளப்பாக இருக்கும்.

வி.ஆர்.சிவா, வழக்கறிஞர்

பாப்பான்நாடு. பட்டுக்கோட்டை தாலுகா.

தஞ்சாவூர். செல் : 9843684395

அரசு நிலங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு அரசு ஆணை

பெறுநர் :

சேவா, 45, டி.பி.எம் நகர், மதுரை–625010,

T1/ 8350865/2024 நாள் : 18.09.2024

தாங்கள் மதுரையில் நடக்கும் மேய்ச்சல் நிலம், கிடைக்காரர்கள், நீர்நிலைகளை பாதுகாத்தல், கருத்தரங்கில் கலந்து கொள்ளவும் அரசு நிலங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்ற சுப்ரீம்கோர்ட் –ஜக்பால் சிங் மனு தீர்ப்புபடி எல்லா மாவட்டங்களிலும் ஆக்கிரமிப்புகளை அகற்றும்படியும் கூறியிருந்தீர்கள். இது சம்மந்தமாக தமிழ்நாடு அரசு ஆணையை இணைத்துள்ளோம். இதன்படி ஆக்கிரமிப்புகளை எடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை தெரிவித்து கொள்கிறேன்.

தங்கள் உண்மையான

ஆர். ஜயின்லுல்லாபுதீன்,

நிலநிர்வாக ஆணையருக்காக

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் அரசாணை

G.O (Ms) No. 64 Date: 8.2.2022

அரசு அவ்வப்போது பல்வேறு கண்காணிப்பு குழுவை ஏற்படுத்தி அரசு நிலங்களையும், நீர் நிலைகளைப் பாதுகாக்கவும், ஆக்கிரமிப்புகளை அகற்றவும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. ஆனால் பல்வேறு கண்காணிப்பு குழுக்கள் ஏற்படுத்தி செயல்பட்டாலும் ஒற்றை வழி அணுகுமுறையில் செயல்பட முடிவு மேற்கொண்டுள்ளது. இதன்படி 3 மட்டங்களில் குழுக்கள் செயல்படும்.

1. ஆர்.டி. ஒ அளவில் – வருவாய் கோட்டாட்சியர் அதிகாரி குழு தலைவர். இதில் தாசில்தார்கள் நகராட்சியர் ஆணையர், உதவி காவல் ஆணையர், உதவி பொறியாளர்கள் போன்றவர்கள் உறுப்பினர்கள்.

மாவட்ட அளவிலான குழு: இதற்கு மாவட்ட ஆட்சியர் தலைவர். இதில் மாவட்ட தலைமை காவலர், மாநகராட்சி ஆணையர், வருவாய் கோட்டாட்சியர்கள் போன்றவர்கள் உறுப்பினர்கள்.

மாநில அளவில் குழு:

இதற்கு தலைமைச் செயலாளர் தலைவர். இதில் வருவாய்த்துறை, பேரிடர் மேலாண்மை, நகராட்சி நிர்வாகம், குடிநீர் விநியோகம், நெடுஞ்சாலைத்துறை, வீட்டுவசதி துறை, காவல்துறை, நிலஅளவு, பதிவேடுதுறை செயலாளர்கள் உறுப்பினர்கள்.

ஒவ்வொரு மாதமும் மேற்படி 3 மட்டங்களிலுள்ள குழுக்கள் கூடி அரசு நிலங்களில் ஆக்கிரமிப்புகள் குறிப்பாக நீர்நிலைகள் ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இங்ஙனம்

குமார் ஜயந்த், செயலாளர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

23 ம் பக்க தொடர்ச்சி.....

பெறுநர்

எல்லா மாவட்ட ஆட்சியர்கள், செயலாளர்கள், இயக்குநர்கள், ஆணையர்கள் பேரூராட்சி, நகராட்சி நிர்வாகத்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஊரகவளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து துறை, நீர்வளத்துறை, நில நிர்வாகம்.

மானாவாரியில் மரப்பயிர் சாகுபடி

என்னுடைய 30 ஏக்கர் கரிசல் நிலத்தில் வாகை, வேம்பு, மூங்கில், சுபாபுல், புளி, செம்மரம், சாவுக்கு, காயா, மஹாகனி, பென்சில்மரம் போன்றன கடந்த 20 ஆண்டுகளுக்கு மேல் நட்டு பராமரித்து வருகிறேன். புளியிலிருந்து ஒவ்வொரு மரத்திலிருந்தும் ரூ. 100 வருமானம் கிடைக்கும். 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மூங்கில் வெட்டலாம். 15 ஆண்டுகளுக்கு ஒரு முறை வாகை மரம் வெட்டி (3–5 அடி சுத்து) வருமானம் பெறலாம். எங்கள் மரப்பயிர் சாகுபடியால் பண்ணைக்கு அருகில் உள்ள தோட்டங்களில் நிலத்தடி நீர் மட்டம் கூடி கிணறுகள் வற்றாமல் உள்ளன. மரம் சாகுபடி செய்வது வங்கியில் நிரந்தர வைப்பு தொகை போட்டு வைப்பது போன்றதாகும். அதாவது பின்னாளில் நல்ல பலன்.

எஸ். நந்தகுமார், கொண்டேகவுண்டன்பாளையம், பொள்ளாச்சி தாலுகா, கோவை மாவட்டம், செல் : 8344330420.

நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம்

	வருட சந்தா ரூபாய்	ஆயுள் சந்தா ரூபாய்
நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள்	200	2000
விவசாயிகள் / தனிநபர்கள்	150	1500
தனிப்பிரதி	30	----
15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250)	1500	----

+ (கொரியர் செலவு ரூ. 250)

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா"
மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
சேவா
மதுரை – கோச்சடை கிளை 45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
SB A/C No – 493902010004241 மதுரை – 625016
IFSC Code : UBIN0549398 தொலைபேசி : 0452–2380082

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

நூல் அஞ்சல்

பெறுநர்

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in